# Padasalai's Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

# செலக்சன்

8

# தமிழ்

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# செலக்சன்

## எட்டாம் வகுப்பு

# 8

# தமிழ்

முப்பருவங்களும் இணைந்தது

முதல் பருவம் + இரண்டாம் பருவம் + மூன்றாம் பருவம்

94430 43338
94430 46662

வெளியிடுபவர்

அன்பு நிலையம்

15, புதுமண்டபம், மதுரை-625001.

விலை ₹ 160



## பொருளடக்கம்

### தமிழ்

### முதல்பருவம்


| வ.எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| | மொழி | மனப்பாடப்பகுதி * | 5 |
| 1. | | 1.1 தமிழ்மொழி வாழ்த்து * | 7 |
| | | 1.2 தமிழ்மொழி மரபு | 12 |
| | தமிழ் இன்பம் | 1.3 தமிழ் வரிவடிவ வளர்ச்சி | 16 |
| | | 1.4 சொற்பூங்கா | 20 |
| | | 1.5 எழுத்துக்களின் பிறப்பு | 23 |
| | | 1.6 மொழியை ஆள்வோம் | 26 |
| | | 1.7 மொழியோடு விளையாடு | 30 |
| 2. | இயற்கை | 2.1 ஓடை * | 32 |
| | | 2.2 கோணக்காத்துப் பாட்டு | 36 |
| | இன்பம் | 2.3 நிலம் பொது | 41 |
| | | 2.4 வெட்டுக்கிளியும் சருகுமானும் | 45 |
| | | 2.5 வினைமுற்று | 48 |
| | | 2.6 மொழியை ஆள்வோம் | 51 |
| | | 2.7 மொழியோடு விளையாடு | 55 |
| | | 2.8 திருக்குறள் * | 56 |
| 3. | அறிவியல், தொழில்நுட்பம் உடலை ஓம்புமின் | 3.1 நோயும் மருந்தும் * | 60 |
| | | 3.2 வருமுன் காப்போம் * | 64 |
| | | 3.3 தமிழர் மருத்துவம் | 68 |
| | | 3.4 தலைக்குள் ஓர் உலகம் | 72 |
| | | 3.5 எச்சம் | 74 |
| | | 3.6 மொழியை ஆள்வோம் | 79 |
| | | 3.7 மொழியோடு விளையாடு | 80 |


* இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பொருளடக்கம்

### தமிழ்

### இரண்டாம் பருவம்


| வ.எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| | கல்வி | மனப்பாடப்பகுதி * | 84 |
| 1. | | 1.1 கல்வி அழகே அழகு * | 85 |
| | | 1.2 புத்தியைத் தீட்டு | 89 |
| | கல்வி கரையில | 1.3 பல்துறைக் கல்வி | 92 |
| | | 1.4 ஆன்ற குடிப்பிறத்தல் | 97 |
| | | 1.5 வேற்றுமை | 99 |
| | | 1.6 மொழியை ஆள்வோம் | 102 |
| | | 1.7 மொழியோடு விளையாடு | 108 |
| 2. | கலை, அழகியல், | 2.1 திருக்கேதாரம் | 110 |
| | பண்பாடு | 2.2 பாடறிந்து ஒழுகுதல் * | 114 |
| | குழலினிது யாழினிது | 2.3 நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் | 117 |
| | | 2.4 தமிழர் இசைக்கருவிகள் | 122 |
| | | 2.5 தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள் | 126 |
| | | 2.6 மொழியை ஆள்வோம் | 128 |
| | | 2.7 மொழியோடு விளையாடு | 132 |
| | | 2.8 திருக்குறள் * | 133 |
| 3. | நாகரிகம், | 3.1 வளம் பெருகுக | 136 |
| | தொழில்,வணிகம் | 3.2 மழைச்சோறு | 139 |
| | உடலை ஓம்புமின் | 3.3 கொங்குநாட்டு வணிகம் | 142 |
| | | 3.4 காலம் உடன் வரும் | 148 |
| | | 3.5 புணர்ச்சி | 151 |
| | | 3.6 மொழியை ஆள்வோம் | 153 |
| | | 3.7 மொழியோடு விளையாடு | 157 |


* இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி



## பொருளடக்கம்

### தமிழ்

### மூன்றாம் பருவம்


| வ.எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| | நாடு, சமூகம் | மனப்பாடப்பகுதி * | 160 |
| 1. | | 1.1 படை வேழம் * | 162 |
| | | 1.2 விடுதலைத் திருநாள் | 166 |
| | பாருக்குள்ளே நல்ல நாடு | 1.3 பாரத ரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன் | 169 |
| | | 1.4 அறிவுசால் ஔவையார் | 174 |
| | | 1.5 வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும் | 181 |
| | | 1.6 மொழியை ஆள்வோம் | 183 |
| | | 1.7 மொழியோடு விளையாடு | 188 |
| 2. | அறம், தத்துவம், | 2.1 ஒன்றே குலம் * | 191 |
| | சிந்தனை | 2.2 மெய்ஞ்ஞான ஒளி | 194 |
| | அறத்தால் வருவதே இன்பம் | 2.3 அயோத்திதாசர் சிந்தனைகள் | 197 |
| | | 2.4 மனித யந்திரம் | 201 |
| | | 2.5 யாப்பு இலக்கணம் | 204 |
| | | 2.6 மொழியை ஆள்வோம் | 207 |
| | | 2.7 மொழியோடு விளையாடு | 211 |
| | | 2.8 திருக்குறள் * | 212 |
| 3. | மனிதம், ஆளுமை | 3.1 உயிர்க்குணங்கள் | 215 |
| | | 3.2 இளைய தோழனுக்கு | 218 |
| | குன்றென நிமிர்ந்துநில் | 3.3 சட்டமேதை அம்பேத்கர் | 221 |
| | | 3.4 பால் மனம் | 226 |
| | | 3.5 அணி இலக்கணம் | 227 |
| | | 3.6 மொழியை ஆள்வோம் | 230 |
| | | 3.7 மொழியோடு விளையாடு | 234 |


* இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

## மனப்பாடப்பகுதி

### தமிழ்மொழி வாழ்த்து

*"வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி*
*வாழிய வாழியவே!*

*வான மளந்தது அனைத்தும் அளந்திடு*
*வண்மொழி வாழியவே!*

*ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி*
*இசைகொண்டு வாழியவே!*

*எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி*
*என்றென்றும் வாழியவே"*

**– பாரதியார்**

### ஓடை

*"ஓடை ஆட உள்ளம் தூண்டுதே! – கல்லில்*
*உருண்டு தவழ்ந்து நெளிந்து பாயும்*
*(ஓடை ஆட ...)*

*பாட இந்த ஓடை எந்தப்*
*பள்ளி சென்று பயின்ற தோடி!*
*ஏடு போதா இதன்கவிக் கார்*
*ஈடு செய்யப் போறாரோடி!*
*(ஓடை ஆட ...)*

*நன்செய் புன்செய்க்கு உணவை ஊட்டி*
*நாட்டு மக்கள் வறுமை ஓட்டிக்*
*கொஞ்சிக் குலவிக் கரையை வாட்டிக்*
*குளிர்ந்த புல்லுக்கு இன்பம் கூட்டி*
*(ஓடை ஆட ...)*

*நெஞ்சில் ஈரம் இல்லார் நாண*
*நீளுழைப்பைக் கொடையைக் காட்டிச்*
*செஞ்சொல் மாதர் வள்ளைப் பாட்டின்*
*சீருக்கு ஏற்ப முழவை மீட்டும்!*
*(ஓடை ஆட ...)*

**– வாணிதாசன்**



### திருக்குறள்

1) *தக்கார் தகவிலர் என்பது அவரவர்*
*எச்சத்தால் காணப் படும்*

2) *கணைகொடிது யாழ்கோடு செவ்விது ஆங்கு அன்ன*
*வினைபடு பாலால் கொளல்*

3) *விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்*
*கற்றாரோடு ஏனை யவர்*

4) *தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்*
*என்குற்றம் ஆகும் இறைக்கு*

**– திருவள்ளுவர்**

### நோயும் மருந்தும்

*பேர்தற்கு அரும்பிணி தாம்இவை அப்பிணி*
*தீர்தற்குஉரிய திரியோக மருந்துஇவை*
*ஓர்தல் தெளிவோடு ஒழுக்கம் இவையுண்டார்*
*பேர்த்து பிணியுள் பிறவார் பெரிது இன்பமுற்றே.*

ஆசிரியர் அறியப்படவில்லை

### வருமுன் காப்போம்

*"உடலின் உறுதி உடையவரே*
*உலகில் இன்பம் உடையவராம்*
*இடமும் பொருளும் நோயாளிக்கு*
*இனிய வாழ்வு தந்திடுமோ!*

*சுத்தமுள்ள இடமெங்கும்*
*சுகமும் உண்டு நீ அதனை*
*நித்தம் நித்தம் பேணுவையேல்*
*நீண்ட ஆயுள் பெறுவாயே*

*காலை மாலை உலாவிநிதம்*
*காற்று வாங்கி வருவோரின்*
*காலைத் தொட்டுக் கும்பிட்டுக்*
*காலன் ஓடிப் போவானே!*

**– கவிமணி தேசிகவிநாயகனார்**

# செலக்சன் 8 தமிழ் முதல் பருவம்

இயல் ஒன்று

மொழி


## 1. தமிழ் இன்பம்

இயல் ஒன்று

கவிதைப்பேழை

## 1.1. தமிழ்மொழி வாழ்த்து

**மனவரைபடம்**




**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ______
   அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி
   விடை : அ) வைப்பு



2. 'என்றென்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
   அ) என்+ றென்றும் ஆ) என்று + என்றும்
   இ) என்னும் + என்றும் ஈ) என் + என்றும்
   விடை : ஆ) என்று + என்றும்
3. 'வானமளந்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
   அ) வான + மளந்தது ஆ) வான் + அளந்தது
   இ) வானம் + அளந்தது ஈ) வான் + மளந்தது
   விடை : இ) வானம் + அளந்தது
4. அறிந்தது + அனைத்தும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ________
   அ) அறிந்தது அனைத்தும் ஆ) அறிந்தனைத்தும்
   இ) அறிந்ததனைத்தும் ஈ) அறிந்துனைத்தும்
   விடை : இ) அறிந்ததனைத்தும்
5. வானம் + அறிந்த என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________
   அ) வானம் அறிந்து ஆ) வான் அறிந்த
   இ) வானமறிந்த ஈ) வான்மறிந்த
   விடை : இ) வானமறிந்த

**தமிழ்மொழி வாழ்த்து – இப்பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| வாழ்க | வானமளந்தது | எங்கள் | வாழ்க |
| வாழிய | வண்மொழி | என்றென்றும் | வாழினம் |

**குறுவினா**

1. **தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது ?**
   ★ தமிழ் ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து புகழ்கொண்டு வாழ்கிறது.
2. **தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது ?**
   ★ தமிழ் ஆகாயத்தால் சூழப்பட்ட எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் வளமான தமிழ்மொழியாக வளர்கிறது.

**சிறுவினா**

**தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.**

**தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகள்:**

★ தமிழ்மொழி எக்காலத்திலும் நிலைபெற்று, ஆகாயத்தால் சூழப்பட்ட எல்லாவற்றையும் அறிந்து, ஏழுகடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச்செய்து, புகழ் கொண்டு வாழ்க என்றும்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



★ உலகம் உள்ள வரையிலும், அறியாமை இருள் நீங்கி, மேன்மையுற்று, பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கி தமிழ் மொழி வாழ்க என்றும்.

★ வானம் உள்ளடங்கிய எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மென்மேலும் தமிழ்மொழி வரை வேண்டும் என்று பாரதியார் வாழ்த்துகிறார்.

**சிந்தனை வினா**

பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன ?

★ தமிழ் மொழி சொல்வளம் நிறைந்தது.

★ எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் மொழி

★ அதனால் பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைத்தார்.

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **இசை எனும் சொல்லின் பொருள் ________**
   அ) பகல் ஆ) புகழ்
   இ) நிலப்பகுதி ஈ) தொல்லை
   **விடை : ஆ) புகழ்**
2. **பழமை மற்றும் துன்பம் என்ற சொற்களின் பொருள்**
   அ) புகழ் ஆ) வைப்பு இ) பரவை ஈ) தொல்லை
   **விடை : ஈ) தொல்லை**
3. **செந்தமிழ்த்தேனீ என்று புகழப்பட்டவர்**
   அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்
   இ) வாணிதாசன் ஈ) சுரதா **விடை : ஆ) பாரதியார்**

**கோடிட்ட இடத்தை நிரப்புக**

1. ________ என்னும் சொல்லின் பொருள் காலம் முழுமையும் ஆகும்.
   **விடை : நிரந்தரம்**
2. ________ என்பதன் பொருள் சூழ்ந்துள்ள அறியாமை இருள் ஆகும்.
   **விடை : சூழ்கலி**
3. வண்மொழி என்பதன் பொருள் ________ ஆகும்
   **விடை : வளமிக்கமொழி**
4. சீட்டுக்கவிகளை எழுதியவர் ________ ஆவார்.
   **விடை : பாரதியார்**



**நயம் காண்க :**

**1) தமிழ்மொழி வாழ்த்து பாடலில் வரும் மோனைச்சொற்களையெடுத்துஎழுதுக.**

| | | |
|---|---|---|
| வாழ்க | எங்கள் | அடி மோனை |
| வாழிய | என்றென்றும் | |
| வான | வாழ்க | |
| வண் | வாழ்க | |

**2) தமிழ்மொழி வாழ்த்து பாடலில் வரும் இயைபுச்சொற்களை எடுத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| வாழியவே | வாழியவே | எழுத்தால் வரும் இயைபு |
| வாழியவே | வாழியவே | |

| | |
|---|---|
| வையகமே | அசையால் வரும் இயைபு |
| தமிழ்மொழியே | |
| தமிழ்நாடே | |

**குறுவினா**

**1) தமிழ்நாடு எவ்வாறு ஒளிர்கிறது ?**

★ பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கி, தமிழ்நாடு ஒளிர்கிறது.

**சிறுவினா**

**பாரதியார் குறிப்பு வரைக**

| | | |
|---|---|---|
| பெயர் | : | சி. சுப்பிரமணிய பாரதியார் |
| காலம் | : | 11.12.1882 – 11.09.1921 |
| ஊர் | : | எட்டயபுரம் |
| பெற்றோர் | : | சின்னசாமி – இலக்குமி அம்மையார் |
| பணி | : | கவிஞர், எழுத்தாளர் |
| நடத்திய இதழ்கள் | : | இந்தியா, விஜயா |
| உரைநடைநூல்கள் | : | சந்திரிகையின் கதை, தராசு |
| செய்யுள் நூல்கள் | : | பாப்பாப்பாட்டு, கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, சீட்டுக்கவி |
| சிறப்புப்பெயர் | : | சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த்தேனீ புதிய அறம் பாடவந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன் |

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கற்பவை கற்றபின்

**1) தமிழ்மொழி வாழ்த்து – பாடலை இசையுடன் பாடி மகிழ்க**

*வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி*
*வாழிய வாழியவே !*

*வான மளந்தது அனைத்தும் அளந்திடு*
*வண்மொழி வாழியவே!*

*ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி*
*இசைகொண்டு வாழியவே!*

*எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி*
*என்றென்றும் வாழியவே!*

*சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்*
*துலங்குக வையகமே!*

*தொல்லை வினைதரு தொல்லை அகன்று*
*சுடர்க தமிழ்நாடே!*

*வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி*
*வாழ்க தமிழ்மொழியே!*

*வானம் அறிந்த தனைத்தும் அறிந்து*
*வளர்மொழி வாழியவே!*

– பாரதியார்

**2) படித்துச் சுவைக்க :**

**செந்தமிழ் அந்தாதி**

*செந்தமிழே செங்கரும்பே செந்தமிழர் சீர்காக்கும்*
*நந்தா விளக்கனைய நாயகியே – முந்தை*
*மொழிக்கெல்லாம் மூத்தவளே மூவேந்தர் அன்பே*
*எழில்மகவே எந்தம் உயிர்.*
*உயிரும் நீ மெய்யும் நீ ஓங்கும் அறமாம்*
*பயிரும் நீ இன்பம் நீ அன்புத் தருவும்நீ*
*வீரம்நீ காதல்நீ ஈசன் அடிக்குநல்*
*ஆரம்நீ யாவும்நீ யே!*

– து. அரங்கன்




## கவிதைப்பேழை

**இயல் ஒன்று**

## 1.2. தமிழ்மொழி மரபு

### மன வரைபடம்




### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.**

1. **பறவைகள் ________ பறந்து செல்கின்றன.**
   அ) நிலத்தில் ஆ) விசும்பில் இ) மரத்தில் ஈ) நீரில்
   **விடை : ஆ) விசும்பில்**
2. **இயற்கையைப் போற்றுதல் தமிழர் ________**
   அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு
   **விடை : அ) மரபு**
3. **'இருதிணை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**
   அ) இரண்டு + திணை ஆ) இரு + திணை
   இ) இருவர் + திணை ஈ) இருந்து + திணை
   **விடை : அ) இரண்டு + திணை**
4. **'ஐம்பால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.**
   அ) ஐம் + பால் ஆ) ஐந்து + பால்
   இ) ஐம்பது + பால் ஈ) ஐ + பால்
   **விடை : ஆ) ஐந்து + பால்**

**குறுவினா**

1. **உலகம் எவற்றால் ஆனது ?**
   ★ உலகம் ஐம்பூதங்களால் ஆனது.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**2. செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது ?**

★ செய்யுளில் மரபுகளை மாற்றினால் பொருள் மாறிவிடும்

★ அதனால் செய்யுளில் மரபுகளை மாற்றக்கூடாது.

**சிந்தனை வினா :**

**1. நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றியதன் காரணம் என்னவாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள் ?**

★ உலகத்துப் பொருள்களை இரு திணைகளாகவும், ஐம்பால்களாகவும் பாகுபடுத்திக் கூறும் மரபு மாறினால் பொருள் மாறிவிடும்.

★ எனவே நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றினார்கள்.

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

**1. விசும்பு என்னும் சொல்லின் பொருள்**

அ) பாட்டு ஆ) கலவை இ) வானம் ஈ) வழக்கம்

**விடை : இ) வானம்**

**2. மயக்கம் என்பதன் பொருள்**

அ) தவறாமை ஆ) வழக்கம்
இ) மாறுபடுதல் ஈ) கலவை

**விடை : ஈ) கலவை**

**3. தழாஅல் என்பதன் பொருள்**

அ) தழுவுதல் ஆ) வழக்கம் இ) பாட்டு ஈ) வானம்

**விடை : அ) தழுவுதல்**

**4. உயிர்எழுத்து நீண்டு ஒலிப்பதை ________ என்பர்**

அ) உயிரளபெடை ஆ) ஒற்றளபெடை
இ) குற்றியலுகரம் ஈ) குற்றியலிகரம்

**விடை : அ) உயிரளபெடை**

**5. தொல்காப்பியத்தின் ஆசிரியர் ________**

அ) தொல்காப்பியர் ஆ) நன்னூலார்
இ) அகத்தியர் ஈ) வீரமாமுனிவர்

**விடை : அ) தொல்காப்பியர்**

**6. தொல்காப்பியத்தில் உள்ள இயல்கள்**

அ) 9 ஆ) 5 இ) 6 ஈ) 7

**விடை : அ) 9**

**7. சிங்கத்தின் ஒலிமரபு ________**

அ) கதறும் ஆ) உறுமும் இ) முழங்கும் ஈ) கத்தும்

**விடை : இ) முழங்கும்**



**சொல்லையும் பொருளையும் பொருத்துக**

| | | | |
|---|---|---|---|
| அ. | வழாஅமை | – | மாறுபடுதல் |
| ஆ. | மரபு | – | தவறாமை |
| இ. | திரிதல் | – | பாட்டு |
| ஈ. | செய்யுள் | – | வழக்கம் |

**விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| அ. | வழாஅமை | – | தவறாமை |
| ஆ. | மரபு | – | வழக்கம் |
| இ. | திரிதல் | – | மாறுபடுதல் |
| ஈ. | செய்யுள் | – | பாட்டு |

**குறுவினா**

**1. இருதிணைகளை கூறுக.**

1. உயர்திணை 2. அஃறிணை

**2. ஐம்பால்களைக் குறிப்பிடுக**

1. ஆண்பால் 2. பெண்பால் 3. பலர்பால்
4. ஒன்றன்பால் 5. பலவின்பால்

**3. ஐம்பூதங்கள் யாவை ?**

★ நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகியவை ஐம்பூதங்கள் ஆகும்.

**4. தமிழ்மொழியின் மரபு யாது ?**

★ உலகத்துப் பொருள்களை இரு திணைகளாகவும் ஐம்பால்களாகவும் பாகுபடுத்திக் கூறுதல் தமிழ்மொழியின் மரபு ஆகும்.

**சிறுவினா**

**1. தொல்காப்பியம் – குறிப்பு வரைக.**

★ தொல்காப்பியத்தின் ஆசிரியர் தொல்காப்பியர்

★ இது மிகப்பழமையான இலக்கண நூல்.

★ இந்நூல், எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

★ ஒன்பது இயல்களை உடையது.

**2. விலங்குகளின் இளமைப் பெயர்களை பட்டியலிடுக**

| | | | |
|---|---|---|---|
| 1. | புலி | – | பறழ் |
| 2. | சிங்கம் | – | குருளை |
| 3. | யானை | – | கன்று |
| 4. | பசு | – | கன்று |
| 5. | கரடி | – | குட்டி |

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**3. விலங்குகளின் ஒலி மரபுகளை பட்டியலிடுக**

1. புலி – உறுமும்
2. சிங்கம் – முழங்கும்
3. யானை – பிளிறும்
4. பசு – கதறும்
5. கரடி – கத்தும்

**கற்பவை கற்றபின்**

**1) பறவைகளின் ஒலி மரபுகளை எழுதி வருக.**

எ.கா. காகம் கரையும்

1. ஆந்தை அலறும்
2. கிளி கொஞ்சும் /பேசும்
3. கோழி கொக்கரிக்கும்
4. சேவல் கூவும்
5. கூகை குழறும்
6. புறா குனுகும்
7. மயில் அகவும்

**2. ஐம்பூதங்கள் ஒவ்வொன்றிற்கும் வழங்கப்படும் வேறு பெயர்களை எழுதுக.**

விசும்பு, புனல், புவி, வளி, கனல்

**3. ஐம்பூதங்களின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.**



1. நீர்



2. நிலம்



3. தீ



4. காற்று



5. வானம்




**உரைநடை உலகம்**

**இயல் ஒன்று**

## 1.3. தமிழ் வரிவடிவ வளர்ச்சி

**மனவரைபடம்**




**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ________ அமைந்தது.**

அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை
இ) அச்சுக்கலை ஈ) நுண்கலை

**விடை : அ) அச்சுக்கலை**

2. **வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து ________ என அழைக்கப்படுகிறது.**

அ) கோட்டெழுத்து ஆ) வட்டெழுத்து
இ) சித்திரஎழுத்து ஈ) ஓவியஎழுத்து

**விடை : ஆ) வட்டெழுத்து**

3. **தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ______**

அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார்
இ) வ. உ. சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

**விடை : ஆ) தந்தை பெரியார்**

**கோடிட்ட இடத்தை நிரப்புக :**

1) கடைச்சங்க காலத்தில் தமிழ் எழுத்துக்கள்______ என அழைக்கப்பட்டன.

**விடை : கண்ணெழுத்துக்கள்**

2) எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைத்தவர் ______ **விடை : வீரமா முனிவர்**

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**குறுவினா**

**1. ஓவிய எழுத்து என்றால் என்ன ?**

★ தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ, வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.

**2. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன ?**

★ ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர்

**3. ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன ?**

★ ஓலைச்சுவடிகளில் புள்ளிபெறும் எழுத்துகளை எழுதும் போது ஓலைச்சுவடி சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்.

★ மேலும் ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகளையும் புள்ளிகளையும் எழுதுவது கடினமாகும்.

**4. வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.**

1. எகர, ஒகர வரிசை எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை அவர் களைந்தார்.
2. எ என்னும் எழுத்திற்குக் கீழ்க்கோடிட்டு ஏ என்னும் எழுத்தை நெடிலாக உருவாக்கினார்.

**சிறுவினா**

**1. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.**

★ ஓலைச் சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் புள்ளிபெறும் எழுத்துகளை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்.

★ ஓலைச் சுவடிகளில் நிறுத்தற் குறிகளும் பத்தி பிரித்தலும் கிடையாது.

★ புள்ளி இடப்பட்டு எழுதப்படும் இடங்களில் புள்ளிகள் தெளிவாகத் தெரியாத நிலையில் அவற்றின் இடம் நோக்கி மெய்யா உயிர்மெய்யா, குறிலா நெடிலா என உணர வேண்டிய நிலை இருந்தது.

★ இதனால் படிப்பவர்கள் பெரிதும் இடருற்றனர். எனவே எழுத்துச் சீர்திருத்தம் வேண்டியதாயிற்று.

**2. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.**

★ நெடிலைக் குறிக்க ஒற்றைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் துணைக்கால் (ா) பயன்படுகின்றது.

★ ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் இணைக்கொம்பு (ை) பயன்படுகின்றது.





★ ஔகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்குப் பின் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் கொம்புக்கால் (ள) பயன்படுகின்றது.

★ குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளின்மேல் புள்ளி இடும் வழக்கம் இக்காலத்தில் வழக்கொழிந்துவிட்டது.

**நெடுவினா.**

**1) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.**

**எழுத்துகளின் தோற்றம்**

★ மனிதன் தனக்கு எதிரே இல்லாதவர்களுக்கும் பின்னால் வரும் தலைமுறையினருக்கும் தனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினான்.

★ அதற்காகப் பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தான்.

★ இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை ஆகும்.

★ தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.

★ அடுத்ததாக ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்துக்கு உரிய முழு ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக மாறியது.

★ அதன்பின் ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் முதல் ஓசையைக் குறிப்பதாயிற்று.

★ இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர்.

★ இன்று உள்ள எழுத்துகள் ஒரு காலத்தில் பொருள்களின் ஓவியமாக இருந்தவற்றின் திரிபுகளாக கருதப்படுகின்றன.

**சிந்தனை வினா**

**1. தற்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குச் செய்யவேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.**

★ தமிழ், தமிழறிஞர்களிடம் வளர வேண்டும்.

★ அரசியல், சாதி, சமயம் என்னும் குறுகிய வட்டத்துக்குள் அடைக்கப்படக்கூடாது.

★ தொடர்ந்த கலைச்சொல்லாக்கமும், பொதுவான பயன்பாடும் இருத்தல் வேண்டும்.

★ புதுமைகளைப் புகுத்தியும் பழமையினைக் காத்தும் வருதல் வேண்டும்.

**2. தமிழை உரோமன் எழுத்துருவில் எழுதுவதால் தமிழுக்கு ஏற்படும் தீங்குகள் குறித்து விவாதிக்கவும்.**

★ தமிழ் எழுத்துகள் அழிவுறும் நிலை ஏற்படும்.

★ உரோமன் எழுத்துகள், தமிழ் எழுத்துகளுடன் கலந்து வரும் நிலை ஏற்படும்.

★ தமிழின் தனித்தன்மை குறையும்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. செப்பேடுகள் கிடைத்துள்ள நூற்றாண்டு ________**

அ) 8 ஆம் நூற்றாண்டு ஆ) 7 ஆம் நூற்றாண்டு
இ) 6 ஆம் நூற்றாண்டு ஈ) 5 ஆம் நூற்றாண்டு

**விடை : ஆ) 7 ஆம் நூற்றாண்டு**

**2. தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவம் உள்ள இடங்கள் ________**

அ) கோவில் கருங்கல் சுவர்கள், செப்பேடுகள்
ஆ) மலைகள், காடுகள்
இ) குகைகள், பாறைகள்
ஈ) வீடுகள், பள்ளிகள்

**விடை : அ) கோவில் கருங்கல் சுவர்கள், செப்பேடுகள்**

**குறுவினா**

**1. பழங்காலத்தில் தமிழ் எழுத்துகள் எதில் எழுதப்பட்டன ?**

கற்பாறை, செப்பேடு, ஓலை

**2. அரச்சலூர் கல்வெட்டில் எவை எழுதப்பட்டுள்ளன ?**

அரச்சலூர் கல்வெட்டில் தமிழ் எழுத்தும், வட்டெழுத்தும் கலந்து எழுதப்பட்டுள்ளன.

## கற்பவை கற்றபின்

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து, அதில் இடம்பெற்றுள்ள பழைய வரிவடிவச் சொற்களை எடுத்து எழுதி, அவற்றை இன்றைய வரிவடிவில் மாற்றி எழுதுக.**

சுற்றுபுறச் சூழ்நிலைப் பிரச்சனைகள் பற்றிய இந்தியாவின் கவலை பல்லாண்டு காலமாக வளர்ந்தே வருகிறது.
'மனிதன் ஏழ்மையிலே இருக்கும்போது சத்தற்ற உணவினாலும், நோயினாலும் அச்சுறுத்தப்படுகிறான். பலவீனனாக இருப்பவன் போருக்கு அஞ்சுகிறான்; செல்வந்தனாக இருப்பவனோ தன் கொழுத்த செல்வத்தால் உண்டான அசுத்தத்திற்கு அஞ்சுகிறான்'
என்றெல்லாம் திருமதி இந்திராகாந்தி அன்றைக்கு ஆற்றிய உரை நாம் நினைவு கூரத் தக்கது.

**விடை :**

சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்சனைகள் பற்றிய இந்தியாவின் கவலை பல்லாண்டு காலமாக வளர்ந்தே வருகிறது.

"மனிதன் ஏழ்மையிலே இருக்கும்போது சத்தற்ற உணவினாலும், நோயினாலும் அச்சுறுத்தப்படுகிறான். பலவீனனாக இருப்பவன் போருக்கு அஞ்சுகிறான் ; செல்வந்தனாக இருப்பவனோ தன் கொழுத்த செல்வத்தால் உண்டான அசுத்தத்திற்கு அஞ்சுகிறான்" என்றெல்லாம் திருமதி. இந்திராகாந்தி அன்றைக்கு ஆற்றிய உரை நாம் நினைவு கூறத் தக்கது.




## விரிவானம்

**இயல் ஒன்று**

## 1.4 சொற்பூங்கா

### மனவரைபடம்




### மதிப்பீடு

**தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிகளின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

★ ஓர் எழுத்து மொழி எவை எனின் நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி என்பார் தொல்காப்பியர்.

★ நாற்பது நெடில்கள் ஓரெழுத்து ஒரு மொழியாக வரும் என்றார் நன்னூலார். நொ,து என்னும் குறில்களையும் சேர்த்து நாற்பத்து இரண்டு என்றார்.

★ பூ என்பது ஓரெழுத்து ஒரு மொழி. கா என்பதும் ஓரெழுத்து ஒரு மொழி. இவை இரண்டையும் இணைத்துப் பூங்கா எனக் கலைச்சொல் ஆக்கி வைத்துள்ளனர்.

★ ஆ, மா, நீ, மீ, பீ, ஊ, சே, தே இன்னவாறான ஓரெழுத்து ஒரு மொழிகளும் உள்ளன, ஆ, மா என்பவை இணைந்து ஆமா என்னும் கலைச்சொல் வடிவம் கொண்டமை பண்டைக் காலத்திலேயே உண்டு.

★ மா என்பதும் ஓரெழுத்து ஒரு மொழிகளுள் ஒன்று. நாட்டிலுள்ள பெருமக்கள் பெரிதும் கூடும் அவையை மாநாடு என்கிறோம். பல குறு நிலங்களை உள்ளடக்கிய பெருநிலத்தை மாநிலம் என்கிறோம். இவ்வாறெல்லாம் இயல்பாக மா என்னும் ஓரெழுத்து ஒருமொழி மக்கள் வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் திகழ்கின்றது.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



★ ஈ என்னும் பொதுப் பெயர் ஓயாது ஒலி செய்யும் ஒலிக்குறிப்பைக் காட்டி நிற்கிறது. மாட்டு ஈ, தேன் எனப் பகுத்து வழங்கும் வழக்கம் உள்ளது.

★ போ, வா, நீ, சூ, சே, சை, சோ என்பவை எல்லாம் இக்காலத்தில் அனைவரும் வழங்கும் சொற்களே. நன்னூலார் போட்ட பட்டியலில் உள்ளவை பற்றிக் கருதாமல் ஒவ்வொருவரும் எண்ணிப் பார்த்தால் சில விளக்கங்கள் கிட்டும்.

★ இன்னொரு வகையாகவும் பார்க்கலாம். ஆன் என்பது ஆ ஆகியது; மான் என்பது மா ஆகியது.

★ எட்டத்தில் போகிற ஒருவனை ஏய் என அழைத்தனர். ஏய் என்பது ஏ என வழக்கில் ஊன்றிவிட்டது.

★ ஏவு என்னும் சொல் 'ஏ' என்று ஆனது மட்டுமன்றி 'எய்' எனவும் ஆயிற்று.

★ தமிழில் ஒரெழுத்து ஒரு மொழிச் சொற்களின் பெருக்கம் நம் மொழியின் பழமை, உயிரோட்டம், பெருவழக்கு என்பனவற்றைக் கையில் கனியாகக் காட்டும். இத்தகைய தமிழ்மொழியின் சொற்களை, மொழிப்பற்றை மீட்டெடுத்தலே வழிகாட்டிகளுக்கு முதல் கடமையாய் நிற்கிறது.

★ மொழிப்பற்றுள்ள ஒருவனே மொழியை வளர்ப்பான்; அதன் இனத்தை, பண்பாட்டை காப்பான் என்று இளங்குமரனார் கூறுகிறார்.

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுது**

**1. உயிர்மெய் நெட்டெழுத்துகளின் எண்ணிக்கை**

அ) 126 ஆ) 90 இ) 12 ஈ) 18

**விடை : அ) 126**

**2. உயிர்மெய் குறிலெழுத்துகளின் எண்ணிக்கை**

அ) 18 ஆ) 126 இ) 90 ஈ) 18

**விடை : இ) 90**

**3. நன்னூலார் கூறிய ஒரெழுத்து ஒரு மொழிகளின் எண்ணிக்கை**

அ) 126 ஆ) 42 இ) 90 ஈ) 60

**விடை : ஆ) 42**

**4. செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படுபவர்**

அ) பாரதியார் ஆ) தொல்காப்பியர்
இ) நன்னூலார் ஈ) இரா. இளங்குமரனார்

**விடை : ஈ) இரா. இளங்குமரனார்**



**5. இரா. இளங்குமரனார் தொகுத்த நூல்**

அ) தொல்காப்பியம் ஆ) தேவநேயம்
இ) நன்னெறி ஈ) சிறுபஞ்சமூலம்

**விடை : ஆ) தேவநேயம்**

**சிறுவினா**

**இரா. இளங்குமரனார் ஆசிரியர் குறிப்பு தருக.**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் பெயர் | : | இரா. இளங்குமரனார் |
| சிறப்புப்பெயர் | : | செந்தமிழ் அந்தணர் |
| பணி | : | பள்ளி ஆசிரியர் |
| எழுதிய நூல்கள் | : | தமிழின் தனிப்பெருஞ்சிறப்புகள், இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம், பாவாணர் வரலாறு, குண்டலகேசி, யாப்பருங்கலம், புறத்திரட்டு, தமிழ் மரபுரை. |
| தொகுத்த நூல் | : | தேவநேயம் |
| அமைத்தது | : | திருச்சிக்கு அருகில் அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலை, பாவாணர் நூலகம் |
| விருதுகள் | : | பச்சமுத்து பைந்தமிழ், வாழ்நாள் சாதனையாளர் |

## கற்பவை கற்றபின்

**1. ஒரெழுத்து ஒரு மொழிகள் இடம்பெறுமாறு ஐந்து தொடர்கள் எழுதுக.**

★ என் புத்தகப்பையினை எடுத்து வா

★ பூ அழகாக மலர்ந்தது.

★ தீ கொண்டு குப்பைகளை எரித்தான்

★ எனது கை மிகவும் வலித்துக்கொண்டே இருக்கிறது.

★ ஆநிரைகளை மேய்த்து வா.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




## கற்கண்டு

**இயல் ஒன்று**

## 1.5. எழுத்துகளின் பிறப்பு

**மனவரைபடம்**




**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் ________**
அ) இ, ஈ ஆ) உ, ஊ இ) எ, ஏ ஈ) அ, ஆ
**விடை : ஆ) உ, ஊ**

**2. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ________**
அ) மார்பு ஆ) கழுத்து இ) தலை ஈ) மூக்கு
**விடை : இ) தலை**

**3. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் ________**
அ) தலை ஆ) மார்பு இ) மூக்கு ஈ) கழுத்து
**விடை : ஆ) மார்பு**

**4. நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள்**
அ) க், ங் ஆ) ச், ஞ் இ) ட், ண் ஈ) ப், ம்
**விடை : இ) ட், ண்**

**5. கீழ் இதழும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து**
அ) ம் ஆ) ப் இ) ய் ஈ) வ்
**விடை : ஈ) வ்**



**பொருத்துக.**

அ) க், ங். – நாவின் இடை, அண்ணத்தின் இடை
ஆ) ச், ஞ் – நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி
இ) ட், ண் – நாவின் முதல், அண்ணத்தின் அடி
ஈ) த், ந் – நாவின் நுனி, அண்ணத்தின் நுனி

**விடைகள்**

அ) க், ங் – நாவின் முதல், அண்ணத்தின் அடி
ஆ) ச், ஞ் – நாவின் இடை, அண்ணத்தின் இடை
இ) ட், ண் – நாவின் நுனி, அண்ணத்தின் நுனி
ஈ) த், ந் – நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி

**சிறுவினா**

**1. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன ?**

★ உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி, இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறுவேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன.
★ இதனையே எழுத்துகளின் பிறப்பு என்பர்.

**2. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன ?**

★ வல்லின மெய் எழுத்துகள் ஆறும் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
★ மெல்லின மெய் எழுத்துகள் ஆறும் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
★ இடையின மெய் எழுத்துகள் ஆறும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

**3. ழகர, லகர, ளகர, மெய்களின் பிறப்பு முயற்சி பற்றி எழுதுக.**

★ ழகர மெய், மேல் வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கிறது.
★ லகர மெய், மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கிறது.
★ ளகரமெய், மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கிறது.

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. வாயைத் திறந்தால் ஒலிக்கும் எழுத்து ________**
அ) அ ஆ) உ இ) க ஈ) ப
**விடை : அ) அ**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. மெல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் ________**
அ) தலை ஆ) மூக்கு இ) மார்பு ஈ) கழுத்து

**விடை : ஆ) மூக்கு**

**3. இதழ்களைக் குவிப்பதால் பிறப்பது**
அ) ம ஆ) உ இ) ப ஈ) ய

**விடை : ஆ) உ**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. இதழ்கள் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் ________

**விடை : ப், ம்**

2. மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கும் எழுத்துகள் ________

**விடை : ர், ழ்**

**கற்பவை கற்றபின்**

**'ஆய்தம்' – இச்சொல்லில் உள்ள ஒவ்வோர் எழுத்தின் வகையையும், அது பிறக்கும் இடத்தையும் பட்டியல் இடுக.**

| எழுத்துகள் | ஆ | ய் | த | ம் |
|---|---|---|---|---|
| வகை | உயிர் | மெய் | உயிர்மெய் | மெய் |
| பிறக்கும் இடம் | கழுத்து | கழுத்து | மார்பு | மூக்கு |



**இயல் ஒன்று**

## 1.6. மொழியை ஆள்வோம்

**1. கேட்க;**

தமிழ்மொழியை வாழ்த்திப் பாடிய வேறு கவிஞர்களின் பாடல்களைக் கேட்டு மிகழ்க.

**1) தமிழ்த்தேன்மலர் – நாமக்கல் கவிஞர்**

*அமிழ்தம் எங்கம் தமிழ்மொழி*
*அன்னை வாழ்க வாழ்கவே*

*வையகத்தில் இணையிலாத*
*வாழ்வு கண்ட தமிழ்மொழி*

*வானகத்தை நானிலத்தில்*
*வரவழைக்கும் தமிழ்மொழி*

*பொய்அு கந்தை புன்மையாவும்*
*போக்க வல்ல தமிழ்மொழி*

**2) தமிழ் அமுதம் – கவிஞர் கம்பதாசன்**

*தமிழ் என்றால் அமுதத்தின் ஊற்று*
*தமிழ் என்றால் இனிய கற்கண்டு*
*தமிழ் என்றால் மாசற்ற தங்கம்*
*தமிழ் என்றால் குழந்தையின் உள்ளம்*

**கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

***தமிழ் எழுத்துகளின் தோற்றமும் வளர்ச்சியும்***

★ எழுத்து என்பது ஒரு மொழியின் அடிப்படைக்கூறு அகும்.
★ மொழிக்கு நிலைபேறு அளிப்பது எழுத்தாகும்.
★ ஒலி வடிவத்திற்கு வரிவடிவம் கொடுப்பது எழுத்து என்பர்.
★ எழுத்து, எழுதப்படுவதனால் இப்பெயர் பெற்றது.
★ தமிழ்மொழி என்பது செம்மொழியாகவும், பண்டைய காலம் தொட்டே சிறந்த இலக்கண, இலக்கியங்கள் பெற்ற மொழியாகவும் உள்ளது.
★அவ்வாறான தமிழ் எழுத்துக்கள் படிப்படியாக சில மாறுதல்களைப் பெற்றே இன்றை எழுத்துமொழியாக உருவம் பெற்றிருக்கின்றன.
★ எழுத்துகளின் வளர்ச்சியை சித்திரவெழுத்து, தன்மையெழுத்து, உணர்வெழுத்து, ஒலியெழுத்து என நான்காகக் கொள்ளலாம். இதனை தமிழ்நூல் பலவகையாக விளக்குகின்றன.
★ தமிழ் எழுத்துகள் தனிமுறையில் தோற்றமாகி வளர்ச்சி பெற்று, வட்டெழுத்து என்ற நிலையை அடைந்திருக்க வேண்டும் என்று ஆய்வாளாகள் கூறுகின்றனர்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**சொல்லக்கேட்டு எழுதுக.**

உலக மொழிகளின் எழுத்து வரலாற்றை உற்று நோக்கினால் சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதை அறியலாம். அவை ஒரு வரிவடிவத்தை விட்டு மற்றொரு வரிவடிவத்தை ஏற்றுக் கொள்ளுதல்; இருக்கின்ற வரிவடிவத்தில் திருத்தம் செய்து கொள்ளுதல்; எழுத்து எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளுதல் ஆகியனவாகும். வரிவடிவ மாற்றம், வரிவடிவத் திருத்தம், எழுத்துகளின் எண்ணிக்கை மாற்றம் ஆகியவற்றை எழுத்துச் சீர்திருத்தம் என்று குறிப்பிடுகிறோம்.

---

**அகரவரிசைப்படுத்துக.**

எழுத்து, ஒலிவடிவம், அழகுணர்ச்சி, ஏழ்கடல், இரண்டல்ல, ஊழி, உரைநடை, ஔகாரம், ஒலைச்சுவடிகள், ஆரம்நீ, ஈசன், ஐயம்.

**விடை :** அழகுணர்ச்சி, ஆரம்நீ, இரண்டல்ல, ஈசன், உரைநடை, ஊழி, எழுத்து, ஏழ்கடல், ஐயம், ஒலிவடிவம், ஒலைச்சுவடிகள், ஔகாரம்

---

**அறிந்து பயன்படுத்துவோம்.**

**மரபுத் தொடர்கள்**

தமிழ் மொழிக்கெனச் சில சொல் மரபுகள் உள்ளன. அவை பழங்காலம் முதலே பின்பற்றப்படுகின்றன.

**பறவைகளின் ஒலிமரபு**

| | | |
|---|---|---|
| ஆந்தை அலறும் | குயில் கூவும் | மயில் அகவும் |
| காகம் கரையும் | கோழி கொக்கரிக்கும் | கிளி பேசும் |
| சேவல் கூவும் | புறா குனுகும் | கூகை குழறும் |

**தொகை மரபு**

| | | |
|---|---|---|
| மக்கள் கூட்டம் | ஆநிரை | ஆட்டு மந்தை |

**வினைமரபு**

| | | |
|---|---|---|
| சோறு உண் | தண்ணீர் குடி | பூக் கொய் |
| முறுக்குத் தின் | பால் பருகு | இலை பறி |
| சுவர் எழுப்பு | கூடை முடை | பானை வனை |

---

**சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கோழி _____ (கூவும் / கொக்கரிக்கும்) கொக்கரிக்கும்
2. பால் _____ (குடி / பருகு) பருகு
3. சோறு _____ (தின் / உண்) உண்
4. பூ _____ (கொய் / பறி) கொய்
5. ஆ _____ (நிரை / மந்தை) நிரை

---

**மரபுப் பிழையை நீக்கி எழுதுக.**

சேவல் கொக்கரிக்கும் சத்தம் கேட்டுக் கயல் கண் விழித்தாள். பூப்பறிக்க நேரமாகி விட்டதை அறிந்து தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு மரத்தில் குயில் கரைந்து கொண்டிருந்தது. பூவைப் பறித்ததுடன், தோரணம் கட்ட மாவிலையையும் கொய்து கொண்டு வீடு திரும்பினாள். அம்மா தந்த பாலை குடித்துவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டாள்.



**விடை :** சேவல் <u>**கூவும்**</u> சத்தம் கேட்டுக் கயல் கண் விழித்தாள். பூ <u>**கொய்துவர**</u> நேரமாகிவிட்டதை அறிந்து தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு மரத்தில் குயில் <u>**கூவிக்**</u> கொண்டிருந்தது. பூவைக் <u>**கொய்தவுடன்**</u> தோரணம் கட்ட மாவிலைகளையும் பறித்துக் கொண்டு வீடு திரும்பினாள். அம்மா தந்த பாலை <u>**பருகி**</u> விட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டாள்.

---

**கட்டுரை எழுதுக.**

***நான் விரும்பும் கவிஞர் பாரதியார்***

குறிப்புச்சட்டம்

முன்னுரை, பிறப்பு, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமூகப்பற்று, ஒருமைப்பாடு, புதுமைக்கவிஞன், முடிவுரை

**முன்னுரை :**

ஆங்கிலேயரின் அடக்குமுறையால் இந்திய மக்கள் அளவில்லா துன்பம் அடைந்தனர். வேதனையில் வாழ்ந்த மக்களிடையே சுதந்திர உணர்வையும் எழுச்சியையும், வீரம் மிகுந்த தன்னுடைய பாடல்களால் ஏற்படுத்தியவர் பாரதியார்.

**பிறப்பு :**

மகாகவி பாரதியார், திருநெல்வேலி மாவட்டம் எட்டையபுரத்தில் 1882– ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் தேதி சின்னசாமி ஐயர் – இலக்குமியம்மாள் தம்பதியருக்கு மகனாக பிறந்தார். இவரது இயற்பெயர் சுப்பிரமணியன் ஆகும்.

**நாட்டுப்பற்று :**

பாரதத்தாயின் அடிமைத்தளையைத் தகர்த்தெறிய இவர் எழுதிய பாடல்கள் இளைஞர்களை வீறு கொண்டு எழச் செய்தது. சுதந்திரப் போராட்ட வீரர்கள் மேடைகளிலும் வீதிகளிலும் இவருடைய பாடல்களையே பாடினர். நாடகங்கள், திரைப்படங்களிலும் கூட இவரது பாடல்களே இடம் பெற்றன.

"ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா"

என்று இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

**மொழிப்பற்று:**

பல மொழிகளைக் கற்றிருந்த பாரதி, "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்று தமிழ் மொழியின் சிறப்பை எடுத்துரைத்துள்ளார். "செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே" என்று பெருமையும் கூறியதோடு நில்லாமல் "சேமமுற வேண்டுமெனில்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



தெருவெலாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!” என்று ஆணையிட்டார்.

**சமூகப்பற்று :**

சாதிக் கொடுமைகள், பெண்ணடிமை, சமுக ஏற்றத்தாழ்வு என்று அனைத்தையுமே இந்நாட்டிலிருந்து நீக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

“...... ஜாதியில்
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தியாவில் இல்லையே”

என்று சாதிக் கொடுமைகள் இல்லாத பாரதம் வேண்டுமென்றார்.

“மாதர் தன்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவேன் என்று பெண் உரிமைக்காகப் போராடினார்.

**ஒருமைப்பாடு :**

சிறந்த நதியில் சேர நாட்டு பெண்களுடன் சுந்தரத் தெலுங்கினில் பாடல் இசைக்க விரும்பினார். கங்கை நதிக் கரையில் விளையும் கோதுமைக்குக் காவிரி நதிக் கரையில் விளையும் வெற்றிலையைப் பண்டமாற்றுச் செய்ய வேண்டும் எனப் பாடினார். மராட்டியர்களின் கவிதைகளை வாங்கிக் கொண்டு சேர நாட்டுத் தந்தங்களை அவர்களுக்குப் பரிசளிக்க விரும்பினார்.

**புதுமைக்கவிஞர்:**

அரசர்களையும் வள்ளல்களையும் வயிற்றுப்பிழைப்புக்காக பாடும் புலவர்கள் இருந்த காலகட்டத்தில், நாட்டு மக்களுக்காகவும் நாட்டு முன்னேற்றத்திற்காகவும் பாடல்கள் பாடியவர் பாரதி. தன்னலமற்ற தன்மையும், அஞ்சாமையும் கொண்ட புதுமைக்கவிஞருக்கு புதுவைக் கவிஞர் தாசனாக ஆனார்.

**முடிவுரை :**

வளமான, வலிமையான பாரதத்திற்குத் தேவையான சிறந்த வழிகள் யாவும் அவருடைய பாடல்களில் உள்ளன. அவற்றை நாம் பின்பற்றினால் அவர் கனவில் கண்ட பாரதத்தை நாம் நிகழ்காலத்தில் உருவாக்க முடியும். பாட்டுக்கொரு புலவன் பாரதியின் புகழ் ஓங்குக!



## இயல் ஒன்று — 1.7. மொழியோடு விளையாடு

**பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்தெழுதுக.**

**கல், பூ, மரம், புல், வாழ்த்து, சொல், மாதம், கிழமை, ஈ, பசு, படம், பல், கடல், கை, பக்கம், பா.**

| கள் | க்கள் | ங்கள் | ற்கள் |
|---|---|---|---|
| கடல்கள் | பூக்கள் | மரங்கள் | கற்கள் |
| கைகள் | பசுக்கள் | மாதங்கள் | பற்கள் |
| கிழமைகள் | ஈக்கள் | படங்கள் | சொற்கள் |
| வாழ்த்துகள் | பாக்கள் | பக்கங்கள் | புற்கள் |

**ஒருசொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக.**

**எ.கா : அணி – பல அணிகளை அணிந்த வீரர்கள், அணி அணியாய்ச் சென்றனர்.**

படி : பல படிகளை உடையது வீடு, படிப்படியாய் முன்னேறினார்.

திங்கள் : வானில் திங்கள் அழகுடன் காட்சியளிக்கிறது, பங்குனித்திங்கள் விழாக்கள் நடைபெறும்.

ஆறு : ஐந்திற்கு பின் வருவது ஆறு, ஆறுகளில் மீன்கள் நீந்தி விளையாடின.

**சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக.**

1. வட்டெழுத்து எனப்படும் தமிழ் கோடுகளால் வளைந்த அமைந்த எழுத்து

**விடை : வளைந்த கோடுகளால் அமைந்த தமிழெழுத்து வட்டெழுத்து எனப்படும்.**

2. உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ளவரையிலும்

**விடை : உலகம் உள்ளவரையிலும் தமிழ்மொழி வாழட்டும்.**

3. வென்றதை பரணி பகைவரை ஆகும் பாடும் இலக்கியம்

**விடை : பகைவரை வென்றதைப் பாடும் இலக்கியம் பரணி ஆகும்.**

4. கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும்.

**விடை : உயிரெழுத்து பிறக்கும் இடம் கழுத்து ஆகும்.**

5. ஏகலை கலையை அம்புவிடும் தமிழ் என்றது.

**விடை : அம்புவிடும் கலையை ஏகலை என்றது தமிழ்.**

**நிற்க அதற்குத் தக....**

என் பொறுப்புகள்

1. எழுத்துகளைச் சரியான வரிவடித்தில் எழுதுவேன்.
2. அறிவிப்புப் பலகைகளில் உள்ள பிழைகளை உரியவரிடம் கூறித் திருத்தச் செய்வேன்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**கலைச்சொல் அறிவோம்**

| | | |
|---|---|---|
| ஒலிப்பிறப்பியல் | – | Articulatory Phonetics |
| மெய்யொலி | – | Consonant |
| மூக்கொலி | – | Nasal Consonant Sound |
| கல்வெட்டு | – | Epigraph |
| உயிரொலி | – | Vowel |
| அகராதியியல் | – | Lexicography |
| ஒலியன் | – | Phoneme |
| சித்திர எழுத்து | – | Pictograph |

**இணையத்தில் காண்க**

**தமிழ் வரிவடிவ எழுத்துகளில் காலந்தோறும் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இணையத்தில் தேடித் தொகுத்து வருக.**

இணையத்தின் வாயிலாக,

★ வரிவடிவம் என்பது எழுத்து மொழியின் அடிப்படை அலகு ஆகும்.

★ இது எழுத்துக்கள் எண்கள், முற்றுப்புள்ளி, காற்புள்ளி முதலிய குறியீடுகள் போன்ற உலக எழுத்து மொழியில் உள்ள எல்லாத் தனித்தனிக் குறிகளையும் உள்ளடக்கும்.

★ எழுத்து காலமுறையால் மாற்றம் வந்தது. காலந்தோறும் தமிழ் எழுத்துகளின் வரிவடிவங்கள் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வளர்ச்சி அடைந்து வந்துள்ளன.

★ அச்சுக்கலை தோன்றிய பிறகே தமிழ் எழுத்துகள் நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன.

★ வட்டெழுத்து என்பது மாறி, தமிழ் எழுத்தாக மாறியது.

★ பண்டையக்காலத்தின் தமிழ் எழுத்துகளும் நாம் இன்று எழுதுவது போன்ற வடிவத்தில் எழுதப்படவில்லை.

★ அவை காலத்திற்கேற்பப் பல உருவமாற்றங்களைப் பெற்றுதான் இக்கால வடிவத்தை அடைந்திருக்கின்றன என்பதை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# ⑧ தமிழ்
# இரண்டாம் பருவம்

பொருளடக்கம்


| வ.எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | கல்வி | மனப்பாடப்பகுதி * | 84 |
| | | 1.1 கல்வி அழகே அழகு * | 85 |
| | | 1.2 புத்தியைத் தீட்டு | 89 |
| | கல்வி கரையில | 1.3 பல்துறைக் கல்வி | 92 |
| | | 1.4 ஆன்ற குடிப்பிறத்தல் | 97 |
| | | 1.5 வேற்றுமை | 99 |
| | | 1.6 மொழியை ஆள்வோம் | 102 |
| | | 1.7 மொழியோடு விளையாடு | 108 |
| 2. | கலை, அழகியல், பண்பாடு குழலினிது யாழினிது | 2.1 திருக்கேதாரம் | 110 |
| | | 2.2 பாடறிந்து ஒழுகுதல் * | 114 |
| | | 2.3 நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் | 117 |
| | | 2.4 தமிழர் இசைக்கருவிகள் | 122 |
| | | 2.5 தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள் | 126 |
| | | 2.6 மொழியை ஆள்வோம் | 128 |
| | | 2.7 மொழியோடு விளையாடு | 132 |
| | | 2.8 திருக்குறள் * | 133 |
| 3. | நாகரிகம், தொழில்,வணிகம் உடலை ஓம்புமின் | 3.1 வளம் பெருகுக | 136 |
| | | 3.2 மழைச்சோறு | 139 |
| | | 3.3 கொங்குநாட்டு வணிகம் | 142 |
| | | 3.4 காலம் உடன் வரும் | 148 |
| | | 3.5 புணர்ச்சி | 151 |
| | | 3.6 மொழியை ஆள்வோம் | 153 |
| | | 3.7 மொழியோடு விளையாடு | 157 |


* இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி



## மனப்பாடப்பகுதி

### கல்வி அழகே அழகு

*"கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்*
*மற்றோர் அணிகலம் வேண்டாவாம் – முற்ற*
*முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே*
*அழகுக்கு அழகுசெய் வார்"*

– குமரகுருபரர்

### பாடறிந்து ஒழுகுதல்

*"ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்*
*போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை*
*பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்*
*அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை*
*அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்*
*செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை*
*நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை*
*முறை எனப்படுவது கண்ஓடாது உயிர் வௌவல்*
*பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்"*

### திருக்குறள்

1) *இதனை இதனால் இவன்முடிக்கும் என்று ஆய்ந்து*
*அதனை அவன்கண் விடல்*

2) *கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்*
*வேட்ப மொழிவதாம் சொல்.*

3) *சொல்லுக சொல்லைப் பிறிது ஓர்சொல் அச்சொல்லை*
*வெல்லும்சொல் இன்மை அறிந்து*

– திருவள்ளுவர்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# செலக்சன் 8 தமிழ் இரண்டாம் பருவம்

இயல் ஒன்று


## 1. கல்வி கரையில

இயல் ஒன்று

கவிதைப்பேழை

## 1.1. கல்வி அழகே அழகு

### மனவரைபடம்




### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **கற்றவருக்கு அழகு தருவது ______**

அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி

**விடை : ஈ) கல்வி**



2. **'கலனல்லால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________**

அ) கலன்+ லல்லால் ஆ) கலம் + அல்லால்
இ) கலன் + அல்லால் ஈ) கலன் + னல்லால்

**விடை : இ) கலன் + அல்லால்**

**சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

1. அழகு
**விடை : மனிதனுக்கு அழகைத் தருவது கல்வியே ஆகும்.**
2. கற்றவர்
**விடை : கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பாகும்.**
3. அணிகலன்
**விடை : மனிதனுக்கு உயர்வைத் தரக்கூடிய உண்மையான அணிகலன் கல்வியே ஆகும்.**

**குறுவினா.**

1. **யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை ?**

★ கல்வி கற்றவர்க்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை.

**சிறுவினா**

1. **நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

★ ஒளிரும் மணிகளால் செய்யப்பட்ட அணிகலனுக்கு மேலும் அழகூட்ட வேறு அணிகலன்கள் தேவையில்லை.
★ அதுபோலக் கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு தரும்.
★ ஆகையால் அழகுசேர்க்கும் பிற அணிகலன்கள் அவருக்குத் தேவையில்லை.

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம்

**சிந்தனை வினா**

1. **கல்வியின் பயன்களாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.**

★ நம்மிடம் இருக்கும் அறியாமையைப் போக்குகிறது.
★ அறிவை விரிவாக்குகிறது
★ அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் பயனையும் கல்வியால் பெறமுடியும்.
★ கவலையின்றி வாழ வழிவகுக்கிறது.
★ சென்ற இடங்களில் எல்லாம் சிறப்பினைத் தருகிறது.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. நீதிநெறி விளக்கத்தின் ஆசிரியர் ________**

அ) குமரகுருபரர் ஆ) திருவள்ளுவர்
இ) கம்பர் ஈ) இளங்கோவடிகள்

**விடை : அ) குமரகுருபரர்**

**2. 'கலன்' என்பதன் பொருள் ________**

அ) கப்பல் ஆ) நீதி இ) கல்வி ஈ) அணிகலன்

**விடை : ஈ) அணிகலன்**

**3. நீதி நெறி விளக்கத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை**

அ) 105 ஆ) 102 இ) 100 ஈ) 108

**விடை : ஆ) 102**

**4. முற்ற என்பதன் பொருள்**

அ) அழிய ஆ) ஒளிர இ) படிக்க ஈ) எழுத

**விடை : ஆ) ஒளிர**

**குறுவினா**

**1) கற்றவர்க்கு அழகு எது ?**

★ கல்வி கற்றவர்க்கு அவர்கற்ற கல்வியே அழகு.

**2. குமரகுருபரர் குறிப்பு வரைக**

| | | |
|---|---|---|
| பெயர் | : | குமரகுருபரர் |
| ஊர் | : | தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள திருவைகுண்டம் |
| பெற்றோர் | : | சண்முக சிகாமணி கவிராயர் – சிவகாம சுந்தரி அம்மையார் |
| ஆண்டு | : | கி.பி. 17 ஆம் நூற்றாண்டு |
| எழுதிய நூல்கள் | : | கந்தர் கலிவெண்பா, கயிலைக் கலம்பகம், சகலகலா வல்லி மாலை, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் |

## கற்பவை கற்றபின்

**1) கல்வி குறித்து வழங்கப்படும் பழமொழிகளைத் தொகுத்து எழுதுக.**

★ கல்வி கரையில; கற்பவர் நாள்சில
★ கற்றோர்கருச் சென்ற இடமெல்லாம் சிறப்பு
★ இளமையில் கல்
★ இளமையிற் கல்வி சிலைமேல் எழுத்து
★ கல்வி அழகே அழகு



★ கல்விக்கு அழகு கசடற மொழிதல்
★ கற்கையில் கல்வி கசப்பு; கற்றபின் அதுவே இனிப்பு

**2) கற்றோரின் சிறப்புகளைப் பற்றிப் பிற நூல்களில் இடம்பெற்ற பாடல்களைத் தொகுத்து எழுதுக.**

1. யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு – திருக்குறள்

2. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் – திருக்குறள்

3. ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை – அந்நாடு
வேறுநா டாகா தமவேயாம் ஆயினால்
ஆற்றுண வேண்டுவதில்

பழமொழி நானூறு

**3. பின்வரும் நாலடியார் பாடலைப் படித்துச் சுவைக்க.**

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணி பல – தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




## கவிதைப்பேழை

**இயல் ஒன்று**

## 1.2. புத்தியைத் தீட்டு

**மன வரைபடம்**




**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. என் நண்பர் பெரும்புலவராக இருந்தபோதும் ________ இன்றி வாழ்ந்தார்.**

அ) சோம்பல் ஆ) அகம்பாவம்
இ) வருத்தம் ஈ) வெகுளி

**விடை : ஆ) அகம்பாவம்**

**2. 'கோயிலப்பா' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) கோ + அப்பா ஆ) கோயில் + லப்பா
இ) கோயில் + அப்பா ஈ) கோ + இல்லப்பா

**விடை : இ) கோயில் + அப்பா**

**3. பகைவன் + என்றாலும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________**

அ) பகைவென்றாலும் ஆ) பகைவனென்றாலும்
இ) பகைவன்வென்றாலும் ஈ) பகைவனின்றாலும்

**விடை : ஆ) பகைவனென்றாலும்**

**குறுவினா.**

1. யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது ?

★ மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது.



2. பகைவர்களிடம் நாம் நடந்து கொள்ள வேண்டிய முறை யாது ?

★ பகைவர்களிடம் நாம் அன்போடு நடந்து கொள்ள வேண்டும்.

**சிறுவினா :**

1. புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை ?

**புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகள் :**

★ கண்ணியம் தவறாமல், திறமையைக் காட்டுதல் வேண்டும்.

★ ஆத்திரம் கண்ணை மறைத்திடும்போது அறிவுக்கு வேலையைக் கொடுக்க வேண்டும்.

★ உன்னை அழித்திட வந்த பகைவன் என்றாலும் அன்புக்குப் பாதை காட்ட வேண்டும்.

என்று கவிஞர் ஆலங்குடி சோமு கூறுகின்றார்.

கத்தியைத் தீட்டாதே – உந்தன்
புத்தியைத் தீட்டு

**சிந்தனை வினா:**

**1. உங்கள் மீது பிறர் வெறுப்புக் காட்டினால் அவர்களை எவ்வாறு எதிர்கொள்வீர்கள் ?**

பிறர் நம்மிடம் வெறுப்பைக் காட்டினால், நாம் அவர்களிடம் அன்பைக் காட்ட முயற்சிக்க வேண்டும்.

அவர்கள் புரிந்துகொள்ளாமல், மீண்டும் வெறுப்பைக் காட்டினால், ஒதுங்கிவிடுவது நல்லது என்று நினைக்கிறேன்.

சம மனநிலை இல்லாத மனிதர்கள், தான் நினைத்தது சரி என்று நினைப்பதும் விவாதிப்பதும், தன் கருத்திற்கு மாறானவை அனைத்தும் தவறு என்று சாதிப்பார்கள்.

இத்தகைய எண்ணம் கொண்டவர் வெறுப்பைக் காட்டினால், அவர்களிடம் இருந்து தள்ளிநிற்பதே நன்று என்று நான் எண்ணுகிறேன்.

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

**1. தடம் என்பதன் பொருள்**

அ) தாவரம் ஆ) அடையாளம்
இ) பகை ஈ) உள்ளம்

**விடை : ஆ) அடையாளம்**

**2. அகம்பாவம் என்னும் சொல்லுக்குப் பொருள் ______**

அ) பாதை ஆ) புத்தி
இ) செருக்கு ஈ) அன்பு

**விடை : இ) செருக்கு**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**குறுவினா**

**1. எப்போது அறிவுக்கு வேலையைக் கொடுக்க வேண்டும் ?**

★ ஆத்திரம் கண்ணை மறைத்திடும்போது, அறிவுக்கு வேலையைக் கொடுக்க வேண்டும்

**2. ஆலங்குடி சோமு – குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஆலங்குடி சோமு |
| பிறந்த ஊர் | : | சிவகங்கை மாவட்டம் காரைக்குடியை அடுத்த ஆலங்குடி |
| விருது | : | கலைமாமணி |
| பணி | : | திரைப்படப் பாடல் ஆசிரியர் |
| காலம் | : | 12–12–1932 – 6–7–1997 |
| பெற்றோர் | : | கோபால பிள்ளை |
| முதல் பாடல் | : | ஆம்பளைக்கு பொம்பள அவசியந்தான் |

**கற்பனை கற்றபின்**

**1) அறிவின் பெருமையை விளக்கும் பழமொழிகளைத் திரட்டுக.**

★ அறிவுடையாரை அரசனும் விரும்புவான்

★ அறிவே ஆற்றல்

★ அறிவீன இடத்தில் புத்தி கேளாதே

★ அறிவுடையார் சிநேகம் அதிக உத்தமம்.




## உரைநடை உலகம்

**இயல் ஒன்று**

## 1.3. பல்துறைக் கல்வி

**மனவரைபடம்**




**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது ________**

அ) விளக்கு ஆ) கல்வி

இ) விளையாட்டு ஈ) பாட்டு

**விடை : ஆ) கல்வி**

**2. கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ________**

அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை

**விடை : அ) இளமை**

**3. இன்றைய கல்வி ______ நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.**

அ) வீட்டில் ஆ) நாட்டில் இ) பள்ளியில் ஈ) தொழிலில்

**விடை : ஈ) தொழிலில்**

**நிரப்புக.**

1) கலப்பில் ______ உண்டென்பது இயற்கை நுட்பம்.

**விடை : வளர்ச்சி**

2) புற உலக ஆராய்ச்சிக்கு ________ கொழுகொம்பு போன்றது.

**விடை : அறிவியல்**

3) வாழ்விற்குரிய இன்பத்துறைகளில் தலையாயது __ இன்பம் ஆகும்.

**விடை : காவிய**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**பொருத்துக.**

**1. இயற்கை ஓவியம் – சிந்தாமணி**
**2. இயற்கை தவம் – பெரியபுராணம்**
**3. இயற்கை பரிணாமம் – பத்துப்பாட்டு**
**4. இயற்கை அன்பு – கம்பராமாயணம்**

**விடைகள் :**

1. இயற்கை ஓவியம் – பத்தப்பாட்டு
2. இயற்கை தவம் – சிந்தாமணி
3. இயற்கை பரிணாமம் – கம்பராமாயணம்
4. இயற்கை அன்பு – பெரியபுராணம்

**குறுவினா.**

**1. இன்றைய கல்வியின் நிலை பற்றித் திரு.வி.க. கூறுவன யாவை ?**

★ இந்நாளில் கல்வி, பொருளற்றுக் கிடக்கிறது.

★ குறிப்பிட்ட பாடங்களை நெட்டுருச் செய்து, தேர்வில் தேறிப் பட்டம் பெற்று, ஒரு தொழிலில் நுழைவதற்குக் கருவியாக மட்டுமே இருக்கிறது.

என்று திரு.வி.க கூறுகிறார்.

**2. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது ?**

★ முதன்முதலில் தாய்மொழி வாயிலாகவே கல்வி பயிலுதல் வேண்டும்.

★ அதுபோலவே தாய்நாடு என்னும் பெயர் தாய்மொழியைக் கொண்டே பிறக்கிறது.

**3. திரு.வி.க சங்கப்புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.**

★ இளங்கோ, திருத்தக்கதேவர், திருஞானசம்பந்தர், ஆண்டாள், சேக்கிழார், கம்பர், பரஞ்சோதி முதலானோரை திரு.வி.க சங்கப்புலவர்களாகக் குறிப்பிடுகிறார்.

**சிறுவினா**

**1. தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு.வி.க கூறுவனவற்றை எழுதுக.**

★ தமிழிலேயே கல்வி போதிக்க; போதிய கலை; சிறப்பான அறிவியல் கலை இல்லை என்று கூறுகின்றனர்.

★ கலப்பில் வளர்ச்சியுண்டென்பது இயற்கை நுட்பம்

★ தமிழ்மொழியில் அறிவுக்கலைகள் இல்லை என்னும் பழம்பாட்டை நிறுத்தி, அக்கலைகளைத் தமிழில் பெயர்த்து எழுதித் தாய்மொழிக்கு ஆக்கந்தேடுவோம் என்னும் புதுப்பாட்டைப் பாட வேண்டும்.

★ கலைகள் யாவும் தாய்மொழி வழி மாணாக்கர்க்கு அறிவுறுத்தப்



பெறுங்காலமே தமிழ்த்தாய் மீண்டும் அரியாசனம் ஏறும் காலமாகும் என்று தமிழ்வழிக் கல்வி குறித்துத் திரு.வி.க. கூறுகிறார்.

**2. அறிவியல் கல்வி பற்றித் திரு.வி.க கூறுவன யாவை ?**

★ உலக வாழ்விற்கு மிக மிக இன்றியமையாதது 'அறிவியல்' என்னும் அறிவுக்கலை.

★ உடற்கூறு, உடலோம்பு முறை, பூதபௌதிகம், மின்சாரம், நம்மைச் சூழ்ந்துள்ள செடி, கொடி, பறவை, விலங்கு முதலியவற்றில், கோளியக்கம், கணிதம், அகத்தினை முதலியன வேண்டும்.

★ இந்நாளில் இவைகளைப் பற்றிய பொது அறிவாதல் பெற்றே தீரல் வேண்டும்.

★ புற உலக ஆராய்ச்சிக்கு அறிவியல் கொழுகொம்பு போன்றது.

★ நம் முன்னோர் கண்ட பல உண்மைகள் அறிவியல் அரணின்றி இந்நாளில் உறுதிபெறல் அரிது.

★ இக்கால உலகத்தோடு உறவு கொள்வதற்கும் அறிவியல் தேவை.

★ ஆதலின் அறிவியல் என்னும் அறிவுக்கலை இளைஞருலகில் பரவல் வேண்டும்.

**நெடுவினா**

**1. காப்பியக்கல்வி குறித்துத் திரு.வி.க கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

★ வாழ்விற்குரிய இன்பத்துறைகளுள் காவிய இன்பமும் ஒன்று. அதைத் தலையாயது என்றும் கூறலாம்.

★ நாம் தமிழர்கள், நாம் பாட்டின்பத்தை நுகர வேண்டுமேல் நாம் தமிழ் இலக்கியங்களுக்கிடையே செல்ல வேண்டும் தமிழில் இலக்கியங்கள் பலப்பல இருக்கின்றன

★ இயற்கை ஓவியம் பத்துப்பாட்டு, இயற்கை இன்பக்கலம் கலித்தொகை, இயற்கை வாழ்வில்லம் திருக்குறள், இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும், இயற்கைத் தவம் சிந்தாமணி, இயற்கைப் பரிணாமம் கம்பராமாயணம், இயற்கை அன்பு பெரியபுராணம், இயற்கை இறையுறையுள் தேவார திருவாசக திருவாய் மொழிகள்.

★ இத்தமிழ்க் கருவூலங்களை உன்ன உன்ன உள்ளத்தெழும் இன்ப அன்பைச் சொல்லால் சொல்ல இயலாது.

என்று திரு.வி.க காப்பியக் கல்வியைக் குறித்துக் கூறுகிறார்.

**சிந்தனை வினா:**

**1) திரு.வி.க. குறிப்பிடும் பல்துறைக் கல்வியில் நீங்கள் எதனைக் கற்க விரும்புகிறீர்கள் ?**

நான் நாடகக்கல்வியைக் கற்க விரும்புகிறேன்.

★ அழிந்துவரும்நாடகத்துறைக்குப்புத்துயிர்வழங்கவேண்டும்.

★ நாடகத்தை நல்வழிப்படுத்தி சமூகக் குற்றங்களை நீக்க வேண்டும்.

★ மாணாக்கரை அதன்கண் தலைப்படுமாறு செய்து

www.Padasalai.Net www.TrbTnpsc.com



★ மாணாக்கரை அதன்கண் தலைப்படுமாறு செய்து நாடகத்துறையின் மூலமாக விழிப்புணர்வை மக்களுக்குத் தர செய்ய வேண்டும்.

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஐ.நா அவையின் முதல் பெண் தலைவர் ________**

அ) விஜயலட்சுமி பண்டிட் ஆ) இந்திரா காந்தி
இ) முத்துலட்சுமி அம்மையார் ஈ) ஐடாஸ் கட்டர்

**விடை : அ) விஜயலட்சுமி பண்டிட்**

**2. இயற்கை வாழ்வில்லம் ________**

அ) நாலடியார் ஆ) திருக்குறள்
இ) சிலப்பதிகாரம் ஈ) கலித்தொகை

**விடை : ஆ) திருக்குறள்**

**நிரப்புக.**

1) ______ மனித ஆன்மாவுக்குப் பயிற்சி அளிக்கும் ஒரு நெறிமுறை ஆகும். **விடை : கல்வி**

2) தமிழ்த்தென்றல் என்று அழைக்கப்படுபவர் ________ **விடை : திரு.வி.க.**

**குறுவினா**

**1. கல்விகுறித்து விஜயலட்சுமி பண்டிட் கூறுவன யாவை ?**

கல்வி என்பது வருவாய் தேடும் வழி முறை அல்ல.

அது மெய்ம்மையைத் தேடவும் அறநெறியைப் பயிலவும் மனித ஆன்மாவுக்குப் பயிற்சியளிக்கும் ஒரு நெறிமுறையாகும்.

**2. திரு.வி.க. குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.வி. கல்யாணசுந்தரனார் |
| ஊர் | : | துள்ளம் (காஞ்சிபுரம் மாவட்டம்) |
| பெற்றோர் | : | விருத்தாசலனார் – சின்னம்மையார் |
| மனைவி | : | பச்சையம்மாள் |
| பணி | : | ஆசிரியர் |
| சிறப்புப் பெயர் | : | தமிழ்த்தென்றல் |
| காலம் | : | 26.08.1883 – 17.09.1953 |
| எழுதியநூல்கள் | : | மனித வாழ்க்கையும், காந்தியடிகளும், பெண்ணின் பெருமை, தமிழ் சோலை, பொதுமை வேட்டல், முருகன் அல்லது அழகு, இளமை விருந்து |
| நடத்திய இதழ்கள் | : | தேசபக்தன், நவசக்தி |
| ஈடுபாடு | : | அரசியல், சமுதாயம், சமயம், தொழிலாளர் நலன் |



## கற்பவை கற்றபின்

**1. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகிய தொகுப்புகளில் இடம்பெறும் நூல்களின் பெயர்களைத் திரட்டி எழுதுக.**

**1. பத்துப்பாட்டு**

i) திருமுருகாற்றுப்படை ii) சிறுபாணாற்றுப்படை
iii) பொருநராற்றுப்படை iv) பெரும்பாணாற்றுப்படை
v) முல்லைப்பாட்டு vi) மதுரைக் காஞ்சி
vii) நெடுநல்வாடை viii) குறிஞ்சிப்பாட்டு
ix) பட்டினப்பாலை x) மலைபடுகடாம்

**2. எட்டுத்தொகை**

i) நற்றினை ii) குறுந்தொகை
iii) ஐங்குறுநூறு iv) பதிற்றுப்பத்து
v) பரிபாடல் vi) கலித்தொகை
vii) அகநானூறு viii) புறநானூறு

**3. பதினெண்கீழ்க்கணக்கு**

i) நாலடியார் ii) நான்மணிக்கடிகை
iii) இன்னா நாற்பது iv) இனியவை நாற்பது
v) களவழி நாற்பது vi) கார் நாற்பது
vii) ஐந்திணை எழுபது viii) திணைமொழி ஐம்பது
ix) திணைமாலை நூற்றைம்பது
x) ஐந்திணை எழுபது xi) திருக்குறள்
xii) திரிகடுகம் xiii) ஆசாரக் கோவை
xiv) பழமொழி நானூறு xv) சிறுபஞ்சமூலம்
xvi) முதுமொழிக் காஞ்சி xvii) ஏலாதி
xviii) கைந்நிலை

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




### விரிவானம்

**இயல் ஒன்று**

## 1.4. ஆன்ற குடிப்பிறத்தல்

**மனவரைபடம்**




**மதிப்பீடு**

**1. திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.**

★ பி.ச. குப்புசாமி சிறுகதை ஆசிரியர் எழுதிய ஆன்ற குடிபிறத்தல்.

★ சிகாமணியின் மகன் சகாதேவன் சிகாமணி திருடும் பழக்கம் உடையவன். ஒருமுறை ஆசிரியரின் வேட்டியைத் திருடிவிட்டான். ஆசிரியரின் வகுப்பில்தான் சகாதேவன் படித்து வந்தான். அன்று திருக்குறளில் உள்ள பண்புடைமை என்னும் அதிகாரத்தில் வரும்,

அன்புடைமை ஆன்றகுடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு

என்னும் குறட்பாவை நடத்தினார். அதற்குப் பொருள் சொல்லும்போது, ஆன்ற குடிபிறத்தல் என்னும் தொடருக்கு பொருள் கூறினார். சிறந்தகுடியில் பிறக்க வேண்டும் என்பது நம் கையில் இல்லை. சிறந்த குடி உன்னிடமிருந்து பிறக்க வேண்டும் என்பது பொருள். இதைக்கேட்ட சகாதேவனின் மனதில் மாற்றம் ஏற்பட்டது. ஆசிரியர் அப்பன் திருடனாக இருந்தால் மகனும் திருடனாக இருக்க வேண்டும் என்பது இல்லை. அவனிடமிருந்து திருடாதவன் என்னும் ஒரு புதியகுடி உதிக்கட்டும். ஒழுக்கமில்லாத பரம்பரையில் நீ வந்திருந்தாலும் ஒழுக்கத்தின் உறைவிடமாக நீ இருக்க வேண்டும். என்றும் ஆசிரியர் கூறியதைக் கேட்ட சகாதேவன், அன்று மாலையே





தன் தந்தை திருடிவைத்திருந்த வேட்டியை எடுத்து கிருஷ்ணமூர்த்தி என்ற இளைஞன்மூலம் கொடுத்து அனுப்பினான். திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி சகாதேவன் நடந்துள்ளான் என்பதை அறிந்த ஆசிரியர் மிகவும் மிகழ்ச்சியுற்றார்.

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுது**

**1. ஆன்ற குடிப்பிறத்தல் – சிறுகதையின் ஆசிரியர் ______**

அ) அகிலன் ஆ) மு.வ
இ) பி.ச. குப்புசாமி ஈ) ஜெயகாந்தன்

**விடை : இ) பி.ச. குப்புசாமி**

**2. பி.ச. குப்புசாமி ஜெயகாந்தனோடு சேர்ந்து எழுதிய நூல் _____**

அ) பெண்ணின் பெருமை ஆ) பல்லாண்டு
இ) தராசு ஈ) சமரச தீபம்

**விடை : ஆ) பல்லாண்டு**

**3. ஆன்ற குடிப்பிறத்தல் – இடம்பெறும் நூலின் பெயர்**

அ) ஓர் ஆரம்பப்பள்ளி ஆசிரியரின் குறிப்புகள்
ஆ) கனவு மெய்ப்பட வேண்டும்
இ) கந்தர் கலிவெண்பா ஈ) இளமை விருந்து

**விடை : அ) ஓர் ஆரம்பப்பள்ளி ஆசிரியரின் குறிப்புகள்**

**கற்பவை கற்றபின்**

**1. திருக்குறள் கருத்துகளை உணர்த்தும் கதைகளை அறிந்து வந்து வகுப்பில் பகிர்க.**

★ சண்முகலிங்கமும் ரோகினியும் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்திருந்தனர். காலைப் பூசை முடிந்து வெகு நேரமாகியும் இளங்கோவன் கோயிலுக்கு வரவில்லை. மணிவண்ணனும் வரவில்லை. இருவரும் ரோகினியின் சகோதரர்கள்.

★ சண்முகலிங்கம் வியாபாரப் பகை காரணமாகவும், கருணாகரனோடு கொண்ட தீய நட்புக் காரணமாகவும் தனது சகோதரர்களிடம் பகை கொண்டுள்ளான் என்பது ரோகினிக்குத் தெரியும். மணிவண்ணன் இளங்கோவன் எல்லோருக்கும் உதவி செய்பவர்கள். கிராம மக்களின் மீது அக்கறை உள்ளவர்கள். தனது குழந்தையை சண்முகலிங்கம் கடத்தியபோதும் நீதிமன்றத்தில் அவரை மன்னிக்கவேண்டி கடிதம் எழுதினான். அத்தகைய நல்லொழுக்கம் கொண்ட மணிவண்ணனுக்காகக் காத்திருந்திருந்தனர். சிறிதுநேரம் கழித்து வந்த இருவரிடம் சண்முகலிங்கம் மன்னிப்பு கேட்டான். ரோகினி அழுதாள் மணிவண்ணன், ஒருவன் இன்பமாக வாழ, பிறருக்குக் கேடு

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



செய்யக்கூடாது இனியாவது நீங்கள் திருந்தி வாழுங்கள். அப்போதுதான் உங்களுக்குக் கேடு வராது என்றான்

அருங்கேடன் என்பது அறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்

– திருக்குறள்

இக்குறட்பாவின் நெறிப்படி, ஒருவன் தவறான வழியில் சென்று தீயசெயல்களைச் செய்யாதிருந்தால், அவன் கேடில்லாதவன் என அறிந்து கொள்ளலாம்.


---

**இயல் ஒன்று**

**கற்கண்டு**

## 1.5. வேற்றுமை

**மனவரைபடம்**




**மதிப்பீடு**

**சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது ____ ஆகும்.**

அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள்
இ) பயனிலை ஈ) வேற்றுமை

**விடை : ஈ) வேற்றுமை**

**2. எட்டாம் வேற்றுமை ____ வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது.**

அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள்
இ) விளி ஈ) பயனிலை

**விடை : இ) விளி**



**3. உடனிகழ்ச்சிப் பொருளில் ________ வேற்றுமை வரும்.**

அ) மூன்றாம் ஆ) நான்காம்
இ) ஐந்தாம் ஈ) ஆறாம்

**விடை : அ) மூன்றாம்**

**4. 'அறத்தான் வருவதே இன்பம்'– இத்தொடரில் _______ வேற்றுமை பயின்று வந்துள்ளது**

அ) இரண்டாம் ஆ) மூன்றாம்
இ) ஆறாம் ஈ) ஏழாம்

**விடை : ஆ) மூன்றாம்**

**5. 'மலர் பானையை வனைந்தாள்' – இத்தொடர் ______ பொருளைக் குறிக்கிறது.**

அ) ஆக்கல் ஆ) அழித்தல் இ) கொடை ஈ) அடைதல்

**விடை : அ) ஆக்கல்**

---

**பொருத்துக.**

1. மூன்றாம் வேற்றுமை – இராமனுக்குத் தம்பி இலக்குவன்
2. நான்காம் வேற்றுமை – பாரியினது தேர்
3. ஐந்தாம் வேற்றுமை – மண்ணால் குதிரை செய்தான்
4. ஆறாம் வேற்றுமை – ஏவுதல் கலையில் சிறந்தவன் ஏகலைவன்

**விடைகள்**

1. மூன்றாம் வேற்றுமை – மண்ணால் குதிரை செய்தான்
2. நான்காம் வேற்றுமை – இராமனுக்குத் தம்பி இலக்குவன்
3. ஐந்தாம் வேற்றுமை – ஏவுதல் கலையில் சிறந்தவன் ஏகலைவன்
4. ஆறாம் வேற்றுமை – பாரியினது தேர்

---

**சிறுவினா.**

**1. எழுவாய் வேற்றுமையை விளக்குக.**

★ எழுவாயுடன் வேற்றுமை உருபுகள் எதுவும் இணையாமல் எழுவாய் தனித்து நின்று இயல்பான பொருளைத் தருவது முதல் வேற்றுமை ஆகும்.

★ முதல் வேற்றுமையை எழுவாய் வேற்றுமை என்றும் குறிப்பிடுவர். சான்று : பாவை வந்தாள்

---

**2. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை ?**

நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் :

★ கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**3. உடனிகழ்ச்சிப் பொருள் என்றால் என்ன ?**

★ வினை கொண்டு முடியும் பொருளோடு உடன் இருப்பதாகக் காட்டும் பொருள் உடன் நிகழ்ச்சிப் பொருள் ஆகும்

எ.கா : கோவலனோடு கண்ணகியும் வந்தாள்

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**நிரப்புக.**

1. இரண்டாம் வேற்றுமை உருபு ________ ஆகும்.

**விடை : ஐ**

2. ஆறாம் வேற்றுமை ________ பொருளில் வரும்.

**விடை : உரிமைப்பொருள்**

3. வேற்றுமை ________ வகைப்படும்.

**விடை : எட்டு**

4. கருத்தாப்பொருள் ________, ________ என இருவகைப்படும்

**விடை : ஏவுதல் கருத்தா, இயற்றுதல் கருத்தா**

5. ஐந்தாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை இரண்டிலும் வரும் உருபு ________ ஆகும்.

**விடை : இல்**

**குறுவினா**

**1. விளிவேற்றுமை என்றால் என்ன ?**

★ விளிப்பொருளில் வரும்.

★ படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக மாற்றி அழைப்பதையே விளி வேற்றுமை என்கிறோம்

எ.கா : வேலா வா

**2. வேற்றுமை உருபுகள் யாவை ?**

★ ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி என்பன வேற்றுமை உருபுகள் ஆகும்.

**3. இரண்டாம் வேற்றுமைக்குரிய பொருள்கள் யாவை ?**

**இரண்டாம் வேற்றுமைக்குரிய பொருள்கள் :**

ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை

## கற்பவை கற்றபின்

**பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள ஒரு பத்தியைத் தேர்ந்தெடுத்து, அதிலுள்ள வேற்றுமை உருபுகளை எடுத்து எழுதி வகைப்படுத்துக.**

தமிழிலேயே கல்வி போதிக்கத் தமிழில் போதிய



கலைகளில்லையே; சிறப்பான அறிவியல் கலைகளில்லையே என்று சிலர் கூக்குரலிடுகிறார். அவரவர் தாம் கண்ட புதுமைகளை முதல் முதல் தம் தாய்மொழியில் வரைந்துவிடுகிறார். அவை பின்னே பல மொழிகளில் பெயர்த்து எழுதப்படுகின்றன. அம்மொழிபெயர்ப்பு முறையைத் தமிழர் கொண்டு ஏன் தாய்மொழியை வளர்த்தல் கூடாது ? குறியீடுகளுக்குப் பல மொழிகளினின்றும் கடன் வாங்குவது தமிழுக்கு இழுக்காகாது. கலப்பில் வளர்ச்சியுண்டென்பது இயற்கை நுட்பம், தமிழை வளர்க்கும் முறையிலும் அளவிலும் கலப்பைக் கொள்வது சிறப்பு. ஆகவே, தமிழ்மொழியில் அறிவுக்கலைகள் இல்லை என்னும் பழம்பாட்டை நிறுத்தி, அக்கலைகளைத் தமிழில் பெயர்த்து எழுதித் தாய்மொழிக்கு ஆக்கந் தேடுவோம் என்னும் புதுப்பாட்டைப் பாடுமாறு சகோதரர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கலைகள் யாவும் தாய்மொழி வழி மாணாக்கர்க்கு அறிவுறுத்தப் பெறுங் காலமே, தமிழ்த்தாய் மீண்டும் அரியாசனம் ஏறும் காலமாகும்.

**ஐந்தாம் வேற்றுமை :**

தமிழில், கலப்பில்

**இரண்டாம் வேற்றுமை:**

புதுமைகளை, முறையைத், தாய்மொழியை, தமிழை, பழம்பாட்டை, அக்கலைகளை, சகோதரர்களைக்

**நான்காம் வேற்றுமை :**

குறியீடுகளுக்குப், தாய்மொழிக்கு, மாணாக்கர்க்கு

## இயல் ஒன்று — 1.6. மொழியை ஆள்வோம்

**கேட்க;**

1. கல்வியின் சிறப்புகளை விளக்கும் கதைகளைக் கேட்டு மகிழ்க.

ஓர் ஊரில் அண்ணன், தம்பி இரண்டு பேர் வாழ்ந்து வந்தனர். அண்ணனுக்குப் படிப்பு வரவில்லை. தம்பி, படிப்பில் கெட்டிக்காரன். அவன் வகுப்பிலும் அவன்தான் முதலிடம் அவர்களுடைய அம்மா பெரிய மகன், அலைந்து திரிந்து மாடுகளை மேய்க்கிறான் என்று அவனுக்கு பால், முட்டை என்று கொடுப்பார். தம்பிக்கு உழைப்பு அதிகமில்லை என்று அவனுக்கு உணவைக் குறைவாகவே கொடுப்பர். இதைப் பார்த்த அவன் பாட்டி, ஏன் இப்படி செய்கிறாய், இவருக்கும் சமமான உணவைத் தருமாறு கூறுகிறாள். மீண்டும் உழைப்பினைப் பற்றிக் கூறினாள். இதைச் சோதித்துப் பார்க்க அம்மாவுக்கு ஒரு உபாயமும் சொன்னாள். இரவு தூங்கும்போது இருவரின் தொண்டைக்குழியிலும் ஒரு வெண்ணையை வைக்கச் சொன்னாள்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



மறுநாள் காலையில் பார்த்தபோது, அண்ணனின் தொண்டைக் குழியில் வெண்ணை அப்படியே இருந்தது. படிக்கும் சின்னவனின் தொண்டைக்குழியில் வெண்ணை உருகியிருந்தது. படிப்பவனுக்கு எந்த நேரமும், அதே சிந்தனை, கவலை, பயம். அதனால் உடல் சூடாகி வெண்ணை உருகி விட்டது. கல்வி கற்பவர்களையும் கல்வியையும் சிறப்பாக நினைக்க வேண்டும். அம்மா புரிந்து கொண்டு சத்தான உணவுகளைத் தரத் தொடங்கினாள்.

**கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

**கல்வியே அழியாச் செல்வம்**

★ 'இளமையில் கல்' என்பதை உணர்ந்திருக்க வேண்டும். இளவயதில் படிப்பது நம் மனதில் அப்படியே பசுமரத்தாணிபோல் பதிந்துவிடும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

★ கல்விதான் ஒருவனை அறிவாளி ஆக்குகிறது அறியாமை என்னும் இருட்டைக் கல்வி என்னும் ஒளிதான் போக்குகிறது. நல்ல புத்தகங்கள் அறிவு கண்ணைத் திறக்கும் ஒரு திறவுகோல், கல்வி ஒருவனை மட்டும் மேம்படுத்தாது. அவனைச் சார்ந்தவர்களையும், சமுதாயத்தையும், ஏன் நாட்டையுமே அது உயர்த்த உதவும்.

★ கல்வி என்பது அழியாத செல்வம். அது காலத்தால் அழியாது. கள்வராலும் கவரமுடியாது. வெள்ளத்தால் போகாது. தீயினாலும் வேகாது. கல்விச்செல்வம் அள்ள அள்ள குறையாது. அது என்றும் அழியாத செல்வமாகும்.

**சொல்லக்கேட்டு எழுதுக.**

தமிழ் மொழிக்கு வளம் சேர்த்த ஒரு நூல்; தமிழுக்கு வாழ்வியல் உண்மைகளை உணர்த்தும் ஒரு நூல்; தன் தோற்றத்தால் தமிழ்நாட்டுக்கு உலகப் பெரும் புகழைப் பெற்றுத்தந்த சிறந்த நூல் திருவள்ளுவரின் திருக்குறள். திருக்குறள் பற்றிப் பேசாத புலவர் இலர்; எழுதாத அறிஞர், எழுத்தாளர் இலர். பள்ளிப் பருவத்திலும் திருகுறள் படிக்கப்படுகின்றது. பருவம் வளரவளர அதுவும் நுட்பமாகக் கற்கப்படுகின்றது. திருக்குறளுக்குரிய சிறப்பே அதுதான். அஃது எல்லாப் பருவத்தாருக்கும் வேண்டிய விழுமிய நூல். எனவே திருக்குறளில்லாத வீடும் இருக்கக் கூடாது! திருக்குறள் படிக்காத தமிழரும் இருக்கக் கூடாது.

**கீழ்க்காண்பவற்றுள் ஒரு சொல்லை எடுத்து ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களுடன் இணைத்துப் புதிய சொற்களை உருவாக்கு**

| | | | |
|---|---|---|---|
| மா | தேன் | மலர் | செம்மை |
| சிட்டு | கனி | குருவி | இலை |
| காய் | கூடு | முட்டை | மரம் |

**விடை :**

மா மரத்தில் காய்கனியானது.
சிட்டுக்குருவி மாமரத்தில் கூடுகட்டி முட்டையிட்டது.



மாமரத்தில் தேன் கூடு தேனீக்களால் கட்டப்பட்டது.
மாமரத்தில் இலைகளும், காம்பில் பூக்களும் பூத்துக் குலுங்கியது.
மாமரத்தில் செம்மை நிற கனிகள் உருவானது.

**அறிந்து பயன்படுத்துவோம்.**

**நிறுத்தக்குறிகள்**

**காற்புள்ளி ( , )**

1. பொருள்களை எண்ணும் இடங்களில் காற்புள்ளி வரும்.
   (எ.கா) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன ஐந்திணைகள்.
2. கடிதத்தில் விளி முன் காற்புள்ளி வரும். (எ.கா.) அன்புள்ள நண்பா,
3. வினையெச்சங்களுக்குப் பின் காற்புள்ளி வரும்.
   (எ.கா.) பொழிலன் தோட்டத்திற்குச் சென்று, வாழை இலை பறித்து வந்தான்.
4. மேற்கோள் குறிகளுக்கு (") முன் காற்புள்ளி வரும்.
   (எ.கா.) குழந்தை நிலவைப் பார்த்து, "நிலா நிலா ஓடி வா" என்று பாடியது.
5. முகவரியில் இறுதி வரி நீங்க ஏனைய வரிகளின் இறுதியில் காற்புள்ளி வரும்.
   (எ.கா.) கு. ஆண்டாள், எண் 45, காமராசர் தெரு, திருவள்ளூர்.

**அரைப்புள்ளி (;)**

1. ஒரே எழுவாயில் பல வாக்கியங்கள் தொடரும் இடத்தில் அரைப்புள்ளி வரும்.
   (எ.கா.) கரிகாலன் கங்கை வரை படையெடுத்துச் சென்றான்; கனக விசயருடன் போரிட்டான்.
2. உடன்பாடு, எதிர்மறைக் கருத்துகளை ஒன்றாகக் கூறும் இடத்தில் அரைப்புள்ளி வரும்.
   (எ.கா.) நல்லவன் வாழ்வான்; தீயவன் தாழ்வான்.

**முக்காற்புள்ளி (:)**

சிறு தலைப்பான தொகைச் சொல்லை விரித்துக் கூறும் இடத்தில் முக்காற்புள்ளி வரும்.
(எ.கா.) முத்தமிழ் : இயல், இசை, நாடகம்.

**முற்றுப்புள்ளி (.)**

1. சொற்றொடரின் இறுதியில் முற்றுப்புள்ளி வரும்.
   (எ.கா.) கல்வியே மனிதனின் வாழ்வை உயர்த்தும்.
2. சொற்குறுக்கங்களை அடுத்து முற்றுப்புள்ளி வரும்.
   (எ.கா.) திரு.வி.க. மா.க.அ. ஊ.ஒ.ந.நி. பள்ளி
3. பெயரின் தலைப்பெழுத்தை அடுத்து முற்றுப்புள்ளி வரும்.
   (எ.கா.) நெ.து.சுந்தரவடிவேலு

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**வினாக்குறி ( ? )**

வினாப்பொருளை உணர்த்தும் வாக்கியத்தின் இறுதியில் வினாக்குறி இட வேண்டும்.

(எ.கா.) சேக்கிழார் எழுதிய நூல் எது ?

**வியப்புக்குறி ( ! )**

மகிழ்ச்சி, வியப்பு, அச்சம், அவலம், இரங்கல் முதலான உணர்ச்சியை வெளியிடும் இடங்களில் வியப்புக்குறி இட வேண்டும்.

(எ.கா.) தமிழின் இனிமைதான் என்னே! – வியப்பு

பாம்பு! பாம்பு! – அச்சம்

அந்தோ! இயற்கை அழிகிறதே! – அவலம்

**ஒற்றை மேற்கோள் குறி (‘ ’)**

தனிச் சொல்லையோ தனி எழுத்தையோ விளக்கிக் காட்டும்போது, இரட்டை மேற்கோள் குறியில் இன்னொரு கூற்று உட்பட்டு வரும்போதும் ஒற்றை மேற்கோள் பயன்படும்.

(எ.கா.) ‘நல்ல’ என்பது குறிப்புப் பெயரெச்சம் ஆகும்.

கூட்டத்தின் தலைவர், “அறிஞர் அண்ணா அவர்கள் இப்போது ‘தலைப்பில்லை’ என்னும் தலைப்பில் பேசுவார்” என்று அறிவித்தார்

**இரட்டை மேற்கோள்குறி (“ ”)**

நேர்கூற்றுகளிலும் செய்யுள் அடிகளையோ பொன்மொழிகளையோ குறிப்பிடும் இடங்களிலும் இரட்டை மேற்கோள் குறியைப் பயன்படுத்த வேண்டும்.

(எ.கா.) திரு. வி. க. மாணவர்களிடம், “தமிழ்க் காவியங்களைப் படியுங்கள். இன்பம் நுகருங்கள்” என்று கூறினார்.

**பின்வரும் தொடர்களில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.**

1. பூக்கள் நிறைந்த இடம் சோலை ஆகும்

**விடை :** பூக்கள் நிறைந்த இடம் சோலை ஆகும்.

2. திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது

**விடை :** திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது.

3. தமிழ்மொழி செம்மையானது வலிமையானது இளமையானது

**விடை :** தமிழ்மொழி செம்மையானது; வலிமையானது; இளமையானது.

4. கபிலன் தன் தந்தையிடம் இன்று மாலை விளையாடப் போகட்டுமா என்று கேட்டான்

**விடை :** கபிலன் தன் தந்தையிடம், “இன்று மாலை விளையாடப் போகட்டுமா ?” என்று கேட்டான்.

5. திரு வி க எழுதிய பெண்ணின் பெருமை என்னும் நூல் புகழ்பெற்றது

**விடை :** திரு. வி. க எழுதிய ‘பெண்ணின் பெருமை’ என்னும் நூல் புகழ் பெற்றது.



**பின்வரும் பத்தியில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.**

நூல் பல கல் என்பர் பெரியோர் அறிவை வளர்க்கும் நூல்கள் அனைத்தையும் நம்மால் விலை கொடுத்து வாங்க முடியுமா முடியாது நூலகங்கள் இக்குறையை நீக்க உதவுகின்றன பல்வேறு துறைகளைச் சேர்ந்த அனைத்து நூல்களும் நிறைந்த இடம் நூலகம் ஆகும். நூலகத்தின் வகைகளாவன மையநூலகம் மாவட்ட நூலகம் கிளை நூலகம் ஊர்ப்புற நூலகம் எனக்குப் பிடித்த நூல்களுடன் வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைத்தாலும் மகிழ்ச்சியடைவேன் என்றார் நேரு ஆகவே நூலகத்தின் பயன் அறிவோம் அறிவு வளம் பெறுவோம்

‘நூல் பல கல்’ என்பார் பெரியோர். அறிவை வளர்க்கும் நூல்கள் அனைத்தையும் நம்மால் விலை கொடுத்து வாங்க முடியுமா ? முடியாது. நூலகங்கள், இக்குறையை நீக்க உதவுகின்றன. பல்வேறு துறைகளைச் சேர்ந்த அனைத்து நூல்களும் நிறைந்த இடம் நூலகம் ஆகும். நூலகத்தின் வகைகளாவன மையநூலகம், மாவட்ட நூலகம், கிளை நூலகம், ஊர்ப்புற நூலகம். “எனக்குப் பிடித்த நூல்களுடன் வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைத்தாலும் மகிழ்ச்சியடைவேன்” என்றார் நேரு. ஆகவே, நூலகத்தின் பயன் அறிவோம்; அறிவு வளம் பெறுவோம்.

**கீழ்க்காணும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. எந்த நாளை முன்னிட்டுப் புத்தகக் கண்காட்சி நடத்தப்படுகிறது ?
2. புத்தகக் கண்காட்சி எங்கு நடைபெறுகிறது ?
3. புத்தகக் கண்காட்சி எத்தனை நாள்கள் நடைபெறுகிறது ?
4. புத்தகக் கண்காட்சிக்கான நுழைவுக் கட்டணம் எவ்வளவு ?
5. புத்தகம் வாங்குவோருக்கு வழங்கப்படும் சலுகை யாது ?




**விடை :**

1. உலகப் புத்தக நாளை முன்னிட்டுப் புத்தகக் கண்காட்சி நடத்தப்படுகிறது.
2. இராயப்பேட்டை YMCA மைதானம்
3. ஏப்ரல் 13 முதல் 23 முடிய
4. அனுமதி இலவசம்
5. 10% சலுகை வழங்கப்படும்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

## நூலகம்

**குறிப்புச்சட்டகம் :**

முன்னுரை, நூலகத்தின் தேவை, வகைகள், நூலகத்திலுள்ளவை, படிக்கும் முறை, முடிவுரை

**முன்னுரை :**

நூல்பல கல்.

நூலகம் என்பது நூல்களின் ஒழுங்கான வரிசையமைப்பு. பழைய புதிய நூல்களின் அடுக்குகள் உள்ள இடம். அமைதி நிறைந்த இடமாக இருப்பது நூலகம் ஆகும்.

**நூலகத்தின் தேவை :**

ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்
நூலகமில்லா ஊருக்கு அறிவு பாழ்

மனிதனின் அறிவை விரிவாக்குவதில் முக்கியமாக பங்கு வகிப்பது நூலகமாகும். வாசிக்கும் பழக்கம் மூலமே பல தலைவர்கள் தங்களது அறிவை மேம்படுத்தியுள்ளனர் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. இணையதளம், கைப்பேசி என நவீன தொழில்நுட்பத்தில் வளர்ச்சியால் நமது தகவல் பரிமாற்றம் இருந்தாலும் வளரும் தலைமுறைகளுக்கு நூலகத்தின் தேவை அவசியமாகிறது.

**நூலகத்தின் வகைகள் :**

நூலகம், பொது நூலகம், பள்ளி நூலகம், குழந்தைகள் நூலகம், நடமாடும் நூலகம் எனப் பல வகைப்படும்.

**நூலகத்திலுள்ளவை :**

நூலகத்தில் ஆயிரக்கணக்கான நூல்களை ஒழுங்குப்படுத்தி, வகைப்படுத்தி வைத்து அவற்றை எளிதில் பெற்றுப் படிப்பதற்கு வசதியாக வைக்கப்பட்டிருக்கும். அங்கு மொழி, இலக்கியம், கணிதம், அறிவியல், வரலாறு, மருத்துவம், பொறியியல் , சமயம் சார்பான நூல்கள் வைக்கப்பட்டிருக்கும்.

**படிக்கும் முறை :**

நூலகத்தில் அமைதியாகவும், விரைவாகவும் ஆழ்ந்த சிந்தனையுடனும் படிக்க வேண்டும். நுனிப்புல் மேய்தல் கூடாது. நூலகப் படிப்பிற்கென்று தனியாகக் குறிப்பேடு வைத்துக் கொள்ள வேண்டும்.



**முடிவுரை :**

நூலகப் பயன்பாட்டிற்கான விதிகளை உருவாக்கித் தந்த சீர்காழி ஆர்—அரங்கநாதன், இந்திய நூலகத் தந்தை ஆவார். நமக்கு படிக்க உதவும் நூலகங்களைப் போற்றிக் காப்போம்.

## இயல் ஒன்று — 1.7. மொழியோடு விளையாடு

கீழ்க்காணும் வினாக்களுக்கு விடைகளைக் கட்டத்தில் நிரப்புக. வட்டத்தில் சிக்கிய எழுத்துகளை எடுத்து எழுதுக. எழுத்துகளை முறைப்படுத்திக் கல்வி பற்றிய பழமொழியைக் கண்டறிக.

1. திரைப்படப் பாடலாசிரியர் சோமுவின் ஊர்.
2. கேடில் விழுச்செல்வம் _______.
3. 'கலன்' என்னும் சொல்லின் பொருள்.
5. ஏட்டுக்கல்வியுடன்_______ கல்வியும் பயில வேண்டும்.
6. திரு.வி.க எழுதிய நூல்களுள் ஒன்று.
7. மா + பழம் என்பது _______ விகாரம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஆ | ல | ங் | கு | டி | | | | |
| 2. | க | ல் | வி | | | | | | |
| 3. | நீ | தி | நெ | றி | வி | ள | க் | க | ம் |
| 4. | அ | ணி | க | ல | ன் | | | | |
| 5. | வா | ழ் | க் | கை | | | | | |
| 6. | உ | ரி | மை | வே | ட் | ட | ல் | | |
| 7. | தோ | ன் | ற | ல் | | | | | |

வட்டத்தில் சிக்கிய எழுத்துகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆ | ல் | றி | அ | க் | வே | ற |

பழமொழி : அறிவே ஆற்றல்

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**நிற்க அதற்குத் தக**

**என் பொறுப்புகள்...**

1. நாள்தோறும் ஒரு திருக்குறள் கற்பேன்.
2. அனைவரிடமும் அன்பு கொண்டு வாழ்வேன்.

**கலைச்சொல் அறிவோம்**

| | | |
|---|---|---|
| நிறுத்தக்குறி | – | Punctutation |
| மொழிப்பெயர்ப்பு | – | Translation |
| அணிகலன் | – | Ornament |
| விழிப்புணர்வு | – | Awareness |
| திறமை | – | Talent |
| சீர்திருத்தம் | – | Reform |

**இணையத்தில் காண்க.**

திரு.வி.க எழுதிய நூல்களின் விவரங்களை இணையத்தில் தேடி எழுதுக.

1. மனித வாழ்க்கையும், காந்தியடிகளும் – 1921
2. பெண்ணின் பெருமை – 1927
3. முருகன் அல்லது அழகு – 1925
4. சமரச தீபம் – 1934
5. முருகன் அருள்வேட்டல் – 1932
6. திருமால் அருள்வேட்டல் – 1938
7. பொதுமை வேட்டல் – 1942
8. தேசபக்தாமிர்தம் – 1919
9. என்கடன் பணி செய்து கிடப்பதே – 1921
10. நாயன்மார் வரலாறு – 1937
11. திருக்குறள் விரிவுரை (இல்லறவியல்) – 1941
12. தமிழ்த் தென்றல் – 1928
13. தமிழ்ச்சோலை கட்டுரைத் திரட்டு – 1935
14. ஆலமும் அமுதமும் – 1944
15. முதுமை உளறல் – 1951
16. இன்ப வாழ்வு – 1925



# ⑧ தமிழ் மூன்றாம் பருவம்

பொருளடக்கம்


| வ.எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | நாடு, சமூகம் | மனப்பாடப்பகுதி * | 160 |
| | | 1.1 படை வேழம் * | 162 |
| | | 1.2 விடுதலைத் திருநாள் | 166 |
| | பாருக்குள்ளே நல்ல நாடு | 1.3 பாரத ரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன் | 169 |
| | | 1.4 அறிவுசால் ஔவையார் | 174 |
| | | 1.5 வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும் | 181 |
| | | 1.6 மொழியை ஆள்வோம் | 183 |
| | | 1.7 மொழியோடு விளையாடு | 188 |
| 2. | அறம், தத்துவம், சிந்தனை | 2.1 ஒன்றே குலம் * | 191 |
| | | 2.2 மெய்ஞ்ஞான ஒளி | 194 |
| | அறத்தால் வருவதே இன்பம் | 2.3 அயோத்திதாசர் சிந்தனைகள் | 197 |
| | | 2.4 மனித யந்திரம் | 201 |
| | | 2.5 யாப்பு இலக்கணம் | 204 |
| | | 2.6 மொழியை ஆள்வோம் | 207 |
| | | 2.7 மொழியோடு விளையாடு | 211 |
| | | 2.8 திருக்குறள் * | 212 |
| 3. | மனிதம், ஆளுமை | 3.1 உயிர்க்குணங்கள் | 215 |
| | | 3.2 இளைய தோழனுக்கு | 218 |
| | குன்றென நிமிர்ந்துநில் | 3.3 சட்டமேதை அம்பேத்கர் | 221 |
| | | 3.4 பால் மனம் | 226 |
| | | 3.5 அணி இலக்கணம் | 227 |
| | | 3.6 மொழியை ஆள்வோம் | 230 |
| | | 3.7 மொழியோடு விளையாடு | 234 |


* இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## மனப்பாடப்பகுதி

### படைவேழம்

"வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி
மறைவர் சிலர்வழி தேடி வன்பிலம்
இழிவர் சிலர்சிலர் தூறு மண்டுவர்
இருவர் ஒருவழி போகல் இன்றியே (2)

ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்
உடலின் நிழலினை வெருவி அஞ்சினர்
அருவர் வருவர் எனா இறைஞ்சினர்
அபயம் அபயம் எனநடுங்கியே"

– செயங்கொண்டார்

### ஒன்றே குலம்

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர் நினைந்து உய்ம்மினே

படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்குஅது ஆமே"

– திருமூலர்



### திருக்குறள்

1. கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது*
2. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு*
3. பண்புடையார்ப் பட்டு உண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்*

– திருவள்ளுவர்

### இளைய தோழனுக்கு

ஓடிவந்து கைகுலுக்க
ஒருவருமில்லையா ?
உன்னுடன் நீயே
கைகுலுக்குகிக் கொள் !

தூங்கி விழுந்தால்
பூமி உனக்குப்
படுக்கையாகிறது
விழித்து நடந்தால்
அதுவே உனக்குப்
பாதையாகிறது !

நீ
விழித்தெழும் திசையே
பூமிக்குக் கிழக்கு !
உன்
விரல்களில் ஒளிரும்
சூரிய விளக்கு !

நட !
நாளைமட்டுமல்ல
இன்றும்
நம்முடையதுதான்
நட !*

– மு. மேத்தா



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல் ஒன்று


# 1. பாருக்குள்ளே நல்ல நாடு

இயல் ஒன்று

## கவிதைப்பேழை

## 1.1. படை வேழம்

**மனவரைபடம்**




**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. சிங்கம் ..............யில் வாழும்**

அ) மாயை ஆ) ஊழி

இ) முழை ஈ) அலை **விடை : இ) முழை**

**2. கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு ..............**

அ) வீரம் ஆ) அச்சம்

இ) நாணம் ஈ) மகிழ்ச்சி **விடை : ஆ) அச்சம்**

**3. "வெங்கரி" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.........**

அ) வெம் + கரி ஆ) வெம்மை + கரி

இ) வெண் + கரி ஈ) வெங் + கரி **விடை : அ) வெம் + கரி**

**4. "என்றிருள்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...............**

அ) என் + இருள் ஆ) எட்டு + இருள்

இ) என்ற + இருள் ஈ) என்று + இருள் **விடை:ஈ)என்று +இருள்**

**5. போல் + உடன்றன என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ........**

அ) போன்றன ஆ) போலன்றன

இ) போலுடன்றன ஈ) போல்உடன்றன **விடை : இ) போலுடன்றன**



**குறுவினா.**

**1. சோழ வீரர்களைக் கண்டு கலிங்கர் எவ்வாறு நடுங்கினர் ?**

★ சோழ வீரர்களைக் கண்டு கலிங்கர், சோழர் படை தம் உயிரைப் பறிக்கும் காலனோ என அஞ்சினர்.

★ தமது இறுதிக் காலம் நெருங்கிவிட்டதோ என எண்ணி, அலைந்து குலைந்து நடுங்கினர்.

**2. கலிங்க வீரர்கள் எவ்வாறு அஞ்சி ஓடினர் ?**

★ கலிங்க வீரர்கள் தம் நிழலையும் மற்றவர் நிழலையும் கண்டு தமிழர்கள் துரத்தி வருவதாக எண்ணி அஞ்சி ஓடினர்.

**3. சோழனின் யானைப் படையைக் கண்ட வீரர்களின் செயல்கள் யாவை ?**

★ சோழனின் யானைப்படையைக் கண்ட கலிங்க வீரர்கள் இருள் நிறைந்த குகைக்குள் சென்று மறைந்தனர்.

★ ஏனையோர் புறமுதுகு காட்டி ஓடிப் பிழைத்தனர்.

**சிறுவினா :**

**1. சோழ வீரர்களைக் கண்ட கலிங்கப்படை வீரர்களின் செயல்களாகக் கலிங்கத்துப் பரணி கூறுவன யாவை ?**

★ சோழர் படையின் தாக்குதலைக் கண்ட கலிங்கப்படை வீரர்கள் இஃது என்ன மாய வித்தையா என வியந்தனர். தம்மை எரிக்க வந்த தீயோ என அஞ்சினர்.

★ சோழர் படை தம் உயிரைப் பறிக்கும் காலனோ என அஞ்சினர் ; தமது இறுதிக்காலம் நெருங்கிவிட்டதோ என எண்ணி, அலைந்து குலைந்து நடுங்கினர்.

★ அப்படி நடுங்கிய கலிங்கப்படையினர் படைக் கூட்டத்திலிருந்து விலகி ஓடினர்.

★ சிலர் கடலில் தாவிக் குதித்துத் தப்பினர்.

★ சிலர் யானைகளின் பின்னே மறைந்து கொண்டனர். எத்திசையில் செல்வது எனத் தெரியாமல், செல்வதற்கு அரிதான மலைக் குகைகளினுள்ளும் புதர்களுக்குள்ளும் தப்பி ஓடினர்.

★ கலிங்க வீரர்கள் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு ஓடினர்.

★ தம் நிழலையும் மற்றவர் நிழலையும் கண்டு தமிழர்கள் துரத்தி வருவதாக எண்ணி அஞ்சினர். தஞ்சம் வேண்டி வணங்கினர்.

★ சோழ மன்னனின் படையிலுள்ள யானைகள் சினமுற்று இடியைப் போலப் பிளிறின :

★ அவ்வோசையைக் கேட்டு அஞ்சிய வீரர்கள் இருள் நிறைந்த குகைக்குள் சென்று மறைந்தனர் ; ஏனையோர் புறமுதுகுகாட்டி ஓடிப் பிழைத்தனர்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**சிந்தனை வினா :**

**1. ஒரு நாட்டின் பாதுகாப்பிற்குத் தேவையானவை எவை எனக் கருதுகிறீர்கள் ?**

★ மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
★ காடு முடைய தரண் – திருக்குறள்

★ ஒரு நாட்டின் பாதுகாப்பிற்குத் தேவையானவையாகச் சொல்லப்படுபவை, பயன்தரும் நீரும், வளம்மிக்க மண்ணும், நதிகளைப் படைக்கும் மலையும் மும்மாரி பெய்ய உதவும் நிழல்மிக அடர்ந்த காடுகளும் ஆகும்.

**கூடுதல் வினாக்கள்–விடைகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

**1. செயங்கொண்டார் பிறந்த ஊர் ............**

அ) தீபங்குடி ஆ) காரைக்குடி
இ) ஒட்டப்பிடாரம் ஈ) சின்னாளப்பட்டி

**விடை : அ) தீபங்குடி**

**2. கலிங்கத்துப் பரணியை எழுதியவர்............**

அ) ஔவையார் ஆ) சேக்கிழார்
இ) செயங்கொண்டார் ஈ) வள்ளுவர்

**விடை : இ) செயங்கொண்டார்**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. முழை என்பதன் பொருள் .......... **விடை : மலைக்குகை**
2. தூறு என்பதன் பொருள் .......... **விடை : புதர்**
3. இறைஞ்சினர் என்னும் சொல்லின் பொருள் .......... **விடை : வணங்கினர்**
4. மண்டுதல் என்பது .......... **விடை : நெருங்குதல்**
5. உடன்றன என்பது .......... எனப்படும் **விடை : சினந்து எழுந்தன**

**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. மறலி | – | தமிழர் |
| 2. கரி | – | காலன் |
| 3. அருவர் | – | யானை |
| 4. பிலம் | – | நழுவி ஓடுவர் |
| 5. வழிவர் | – | மலைக்குகை |

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| 1. மறலி | – | காலன் |
| 2. கரி | – | யானை |
| 3. அருவர் | – | தமிழர் |
| 4. பிலம் | – | மலைக்குகை |
| 5. வழிவர் | – | நழுவி ஓடுவர் |



**குறுவினா :**

**செயங்கொண்டார் – குறிப்பு வரைக.**

★ செயங்கொண்டார் தீபங்குடி என்னும் ஊரினைச் சேர்ந்தவர்.

★ இவர் முதற்குலோத்துங்கச் சோழனுடைய அவைக்களப் புலவராகத் திகழ்ந்தார்.

★ இவரைப் பரணிக்கோர் செயங்கொண்டார் என்று பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் புகழ்ந்துள்ளார்.

**சிறுவினா :**

**கலிங்கத்துப் பரணி – குறிப்பு வரைக**

★ கலிங்கத்துப் பரணி தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றான பரணி வகையைச் சார்ந்த நூல்.

★ தமிழில் முதல் முதலில் எழுந்த பரணி இந்நூலே ஆகும்

★ இது முதலாம் குலோத்துங்கச் சோழன், அவருடைய படைத் தலைவர் கருணாகரத் தொண்டைமான் ஆகியோரின் கலிங்கப்போர் வெற்றியைப் பேசுகிறது.

★ இந்நூலைத் தென்தமிழ்த் தெய்வப்பரணி என்று ஒட்டக்கூத்தர் புகழ்ந்துள்ளார்.

★ கலிங்கத்துப்பரணி கலித்தாழிசையால் பாடப்பெற்றது: 599 தாழிசைகள் கொண்டது.

★ போர்முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிகொண்ட வீரரைப் புகழ்ந்து பாடும் இலக்கியம் பரணி ஆகும்.

**கற்பவை கற்றபின்**

**1. உங்களுக்குத் தெரிந்த சிற்றிலக்கிய வகைகளின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.**


★ தமிழ் விடு தூது ★ மூவருலா
★ கலிங்கத்துப் பரணி ★ இரட்டை மணிமாலை
★ ஆசாரக் கோவை ★ நூற்றந்தாதி
★ நந்திக் கலம்பம் ★ கையறு நிலை
★ சதகம் ★ குறத்திப் பாட்டு
★ உழத்திப் பாட்டு ★ தாண்டகம்
★ பதிகம் ★ வாயுறை வாழ்த்து

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. போர்க்கருவிகளின் படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.**



**கவிதைப் பேழை**

**இயல் ஒன்று**

## 1.2. விடுதலைத் திருநாள்

**மனவரைபடம்**

விடுதலைத் திருநாள்

கோடையும் வசந்தமும் → மீ. இராசேந்திரன் → மீரா

கல்லூரிப் பேராசிரியர் → அன்னம்விடு தூது → ஊசிகள், குக்கூ மூன்றும் ஆறும், வா இந்தப்பக்கம்

**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. வானில் முழு நிலவு அழகாகத் ............ அளித்தது**

அ) தயவு ஆ) தரிசனம்

இ) துணிவு ஈ) தயக்கம் **விடை : ஆ) தரிசனம்**

**2. இந்த .............முழுவதும் போற்றும்படி வாழ்வதே சிறந்த வாழ்வு.**

அ) வையம் ஆ) வானம்

இ) ஆழி ஈ) கானகம் **விடை : அ) வையம்**



**3. "சீவனில்லாமல்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.........**

அ) சீவ + நில்லாமல் ஆ) சீவன் + நில்லாமல்

இ) சீவன் + இல்லாமல் ஈ) சீவ + இல்லாமல்

**விடை : இ) சீவன் + இல்லாமல்**

**4. "விலங்கொடித்து" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................**

அ) விலம் + கொடித்து ஆ) விலம் + ஒடித்து

இ) விலன் + ஒடித்து ஈ) விலங்கு + ஒடித்து

**விடை:ஈ) விலங்கு + ஒடித்து**

**5. காட்டை + எரித்து என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ........**

அ) காட்டைஎரித்து ஆ) காட்டையெரித்து

இ) காடுஎரித்து ஈ) காடுயெரித்து

**விடை : ஆ) காட்டையெரித்து**

**6. இதம் + தரும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .....**

அ) இதந்தரும் ஆ) இதம்தரும்

இ) இதத்தரும் ஈ) இதைத்தரும்

**விடை : அ) இதந்தரும்**

**குறுவினா :**

**1. பகத்சிங் கண்ட கனவு யாது ?**

★ சதி வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பகத்சிங், தூக்கிலிடப்படும் கடைசி நேரத்திலும் தன் மனக்கண்ணில் கண்ட கனவு இந்தியாவின் விடியல் ஆகும்.

**2. இருண்ட ஆட்சி என எதனை மீரா குறிப்பிடுகிறார் ?**

★ முந்நூறு ஆண்டுகள் நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட அரக்கராகிய அந்நியரின் ஆட்சி இருண்ட ஆட்சி என மீரா குறிப்பிடுகிறார்.

**சிறுவினா :**

**1. இந்தியத் தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள் ?**

★ அடிமையாய்த் தவித்துக்கொண்டிருந்த இந்தியத் தாய் சினந்து எழுந்து தன் கைவிலங்கை உடைத்துப் பகைவரை அழித்து, அவிழ்ந்த கூந்தலை முடித்து நெற்றியில் திலகமிட்டு, இந்தியருக்கு மகிழ்வாகக் காட்சியளிக்கிறாள்.

**சிந்தனை வினா :**

**1. நாட்டுப்பற்றை வளர்க்கும் வகையில் விடுதலை நாளை எவ்வாறு கொண்டாடலாம் ?**

★ வளரும் சமுதாயத்திற்கு, நாட்டுப்பற்றை வளர்க்கும் வகையில், விடுதலையுணர்வை உணர்த்த வேண்டும்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



★ இருநூறு ஆண்டுகளாய் இந்தியா, எவ்வாறு இருந்தது என்பதைக் காணொளியின் மூலமாக உணர்த்த வேண்டும்.

★ தியாகிகளின் வீரம் செறிந்த உரையினைக் கேட்கச் செய்யவேண்டும்.

★ சிறந்த அணிவரிசையை விடுதலை நாளில் நடத்த வேண்டும்.

★ நாடகம், நடனம், பாடல்கள் என விடுதலையைச் சார்ந்த நிகழ்வாக நடத்தி, விடுதலை நாளைக் கொண்டாடலாம்.

## கூடுதல் வினாக்கள்–விடைகள்

**நிரப்புக.**

1. விடுதலை திருநாள் என்ற கவிதை இடம்பெறும் நூல் .......... ஆகும். **விடை : கோடையும் வசந்தமும்**
2. மோகித்து என்னும் சொல்லின் பொருள் .......... **விடை : விரும்பி**
3. சபதம் என்பதன் பொருள்.......... **விடை :சூளுரை**
4. விடுதலை திருநாள், மக்களின் ..........என்னும் உறக்கத்தை ஓட விரட்டியது **விடை : அறியாமை**
5. மீராவின் இயற்பெயர் .......... **விடை : மீ. இராசேந்திரன்**
6. மீரா நடத்திய இதழின் பெயர் .......... **விடை : அன்னம் விடு தூது**

**பொருத்துக:**

| | | |
|---|---|---|
| 1. சீவன் | – | உண்மை |
| 2. வையம் | – | மகிழ்வான காட்சி |
| 3. சத்தியம் | – | உயிர் |
| 4. ஆனந்த தரிசனம் | – | உலகம் |

**விடைகள் :**

| | |
|---|---|
| 1. சீவன் – உயிர் | |
| 2. வையம் – உலகம் | |
| 3. சத்தியம் – உண்மை | |
| 4. ஆனந்த தரிசனம் – | மகிழ்வான காட்சி |

**குறுவினா :**

**1. ஆசிரியர் மீரா – குறிப்பு வரைக.**

**பெயர் :** மீரா
**இயற்பெயர் :** மீ. இராசேந்திரன்
**பிறந்த ஊர் :** சிவகங்கை
**பிறந்த ஆண்டு :** 1938
**பணி :** கல்லூரிப் பேராசிரியர்
**நடத்திய இதழ் :** அன்னம் விட தூது
**எழுதிய நூல்கள் :** ஊசிகள், குக்கூ, மூன்றும் ஆறும், வா இந்தப் பக்கம், கோடையும் வசந்தமும்.

**2. விடுதலைத் திருநாள் எவ்வாறு உருவகப்படுத்தப்பட்டுள்ளது ?**

★ பகைமை என்னும் முள்காட்டினை அழித்து, அங்கு விளைந்த மூங்கிலைப் புரட்சி என்னும் புல்லாங்குழல் ஆக்கி, மூச்சுக்காற்றால் பூபாள இசைபாடும் இனிய நாள் என்று உருவகப்படுத்தப்பட்டுள்ளது.



## கற்பவை கற்றபின்

**1. நீங்கள் விரும்பும் விழா ஒன்றனைப்பற்றி ஒரு பத்தி அளவில் எழுதுக.**

**<u>நான் விரும்பும் விழா – பொங்கல் திருநாள்</u> :**

★ எத்தனையோ இன்னல்கள் இருப்பினும் நலிந்தோரும்கூட பொங்கற் புதுநாளில் புதுத் தெம்புடன் காணப்படுகின்றனர். நம் தமிழர்கள், இந்நாளில் உழைப்பின் பெருமையைப் பற்றியும், அந்நாளில் தமிழர் வாழ்ந்த நேர்த்தியைப் பற்றியும் உரையாடி மகிழ வாய்ப்பு கிடைக்கிறது.

★ தைப்பொங்கலுக்கு முன், நிலத்தில் விதைக்கும் பொருள் நமக்குப் பயன்தருகிறது. தாயும் சேயும் கொஞ்சி மகிழ்வது போல நிலமடந்தையும் தன் மக்களுக்கு வளம் அளிக்கும் முன்பு, விளையாட்டு காட்டுவாள். "உழைத்து பெறு! உரிய நேரத்தில் பெறு! முயற்சி செய்து பெறு!" என்கிறாள்.


★ உழைப்பின் பெருமையை உணர்த்தும் வகையில் எல்லாவற்றிற்கும் நன்றி கூறும் பெருவிழாதான் தமிழர் திருநாள். பெரும் பொங்கல், மாட்டுப்பொங்கல்,ஏறு தழுவுதல், காணும் பொங்கல் என்று ஒவ்வொரு நாட்களையும் அழைத்துக் கொண்டாடும் பெருமைக்குரிய விழாதான் நம் தைப்பொங்கல் திருநாள்.

## இயல் ஒன்று

### உரைநடை உலகம்

### பாரத ரத்னா
### 1.3. எம்.ஜி. இராமச்சந்திரன்

**மனவரைபடம்**




Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. எம். ஜி. ஆர் ............ என்னும் ஊரில் கல்வி பயின்றார்.**

அ) கண்டி ஆ) கும்பகோணம்
இ) சென்னை ஈ)மதுரை **விடை : ஆ) கும்பகோணம்**

**2. எம். ஜி.ஆர். படிப்பைத் தொடரமுடியாமைக்குக் காரணம்............**

அ) நடிப்பு ஆர்வம் ஆ) பள்ளி இல்லாமை
இ) குடும்ப வறுமை ஈ) படிப்பில் ஆர்வம் இல்லாமை
**விடை : இ) குடும்ப வறுமை**

**3. இந்திய அரசு சிறந்த நடிகருக்கான ............ எனும் பட்டத்தை எம்.ஜி. ஆருக்கு வழங்கியது.**

அ) புரட்சித் தலைவர் ஆ) பாரத்
இ) பாரத மாமணி ஈ) புரட்சி நடிகர் **விடை : ஆ) பாரத்**

**4. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம் ............**

அ) திருச்சி ஆ) சென்னை
இ) மதுரை ஈ) கோவை **விடை : இ) மதுரை**

**5. எம். ஜி. ஆருக்கு அழியாத புகழைத் தேடித்தந்த திட்டம் ............**

அ) மதிய உணவுத் திட்டம் ஆ) வீட்டு வசதித் திட்டம்
இ) மகளிர் நலன் திட்டம் ஈ) இலவசக் காலணித் திட்டம்.
**விடை : அ) மதிய உணவுத் திட்டம்**

---

**குறுவினா :**

**1. எம்.ஜி.ஆர் நாடகத்துறையில் ஈடுபடக் காரணம் என்ன ?**

★ எம்.ஜி.ஆர் வறுமையின் காரணமாகவே, அவரும் அவருடைய அண்ணனும் பள்ளிப் படிப்பைத் தொடரமுடியாமல் நாடகக்குழுவில் ஈடுபட்டார்.

---

**2. திரைத்துறையில் எம்.ஜி.ஆரின் பன்முகத் திறமைகள் யாவை ?**

★ திரைத்துறையில் எம்.ஜி.ஆர் சிறு சிறு வேடங்களில் நடிக்கத் தொடங்கி விரைவிலேயே கதாநாயகனாக உயர்ந்தார்.

★ தாம் ஏற்று நடித்த கதை மாந்தர்கள் மூலம் ஏழை, எளியோர், உழவர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் முன்னேற்றத்துக்கு உரிய கருத்துக்களை எடுத்துரைத்தார்.

★ திரைத்துறையில் நடிகர், தயாரிப்பாளர், இயக்குநர் எனப் பன்முகத் திறமை கொண்டு விளங்கினார்.

---

**3. எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்களுள் நான்கினை எழுது.**

1. ஏழைகளுக்கான வீட்டு வசதித் திட்டம்.
2. ஆதரவற்ற மகளிருக்குத் திருமண உதவித் திட்டம்.
3. தாய் சேய் நல இல்லங்கள்
4. நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பாடநூல் வழங்கும் திட்டம்.

---



**சிறுவினா :**

**1. பள்ளிக் குழந்தைகளுக்குக் காலணி வழங்கும் திட்டத்துக்கு அடிப்படையாக அமைந்த நிகழ்வை எழுதுக.**

★ எம்.ஜி.ஆர். ஒருமுறை வெளியூரிலிருந்து மகிழ்வுந்தில் சென்னைக்கு வந்துகொண்டிருந்தார்.

★ வழியில் மூதாட்டி ஒருவரும் பத்துவயதுச் சிறுமி ஒருத்தியும் தலையில் புல்கட்டுகளைச் சுமந்தவாறு கால்களில் காலணிகள் இல்லாமல் சென்று கொண்டிருந்தனர்.

★ சாலையின் சூடு பொறுக்கமுடியாமல் அவர்கள் சாலையோர மர நிழலில் நிற்பதும் ஓடுவதுமாக இருப்பதைக் கண்ட எம்.ஜி.ஆர். உடனே தமது மகிழ்வுந்தை நிறுத்தச் செய்தார்

★ உடன்வந்த தமது துணைவியாரின் காலணியையும், உறவினரான பெண்ணின் காலணியையும் அவர்களிடம் கொடுக்கச் செய்தார்.

★ அந்த நிகழ்வுதான் பள்ளிக்குழந்தைகளுக்கு காலணி வழங்கும் திட்டத்துக்கு அடிப்படையாக அமைந்தது.

---

**2. தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர் ஆற்றிய பணிகள் யாவை ?**

**எம்.ஜி.ஆரின் தமிழ் வளர்ச்சிப் பணிகள் :**

★ தந்தை பெரியார் உருவாக்கிய எழுத்துச் சீர்திருத்தங்களுள் சிலவற்றை நடைமுறைப்படுத்தித் தமிழ் எழுத்துமுறையை எளிமைப்படுத்தினார்.

★ மதுரை மாநகரில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்பாக நடத்தினார்.

★ தஞ்சையில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்தார்.

---

**நெடுவினா :**

**1. எம்.ஜி.ஆரின் பண்பு நலன்களை விளக்கி எழுதுக.**

★ பசியால் வாடிய தமது இளமைக்கால நினைவுகளை மறையாமல் தமிழ்நாட்டுக் குழந்தைகள் பசியறியாமல் படிக்கவேண்டும் என்று விரும்பினார்.

★ எனவே, காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட மதிய உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தி பள்ளிக் குழந்தைகளுக்கு காய்கறிகள், பருப்பு முதலியவற்றுடன் கூடிய மதிய சத்துணவுத் திட்டத்தை அறிவித்தார்.

★ ஏழை எளியவர்கள் காலில் காலணிகூட இல்லாமல் நடந்து செல்லும் நிகழ்ச்சி அவரது மனதில் ஆழமாகப் பதிந்ததால் பள்ளிக் குழந்தைகளுக்கு காலணி வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.

★ எம்.ஜி.ஆர். தாம் ஈட்டிய செல்வத்தை மற்றவர்களுக்குக் கொடுத்து மகிழ்ந்தவர். புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்கள் நிகழ்ந்த

www.Padasalai.Net www.TrbTnpsc.com



போதெல்லாம், பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, உடை வழங்கி அவர்களின் துயர் துடைக்க இவரின் கொடைக்கரங்கள் நீண்டன.

★ வாழ்வில் உயர்நிலையை அடைந்த பின்னரும் எளிமையாக வாழவேண்டும் என்பதை

பதவி வரும்போது பணிவு வரவேண்டும்
துணிவு வரவேண்டும் தோழா !

என்னும் பாடல் வரிகள் மூலம் எடுத்துரைத்தார். மேலும் அப்பாடல் வரிகளுக்குத் தாமே இலக்கணமாகவும் திகழ்ந்தார்.

★ காஷ்மீரில் இந்தியப் படைவீரர் நலச் சங்கத்திற்கு நன்கொடை வழங்க விரும்பினார். ஆனால் அப்பொழுது அவரிடம் பணம் இல்லை. எனவே, அங்குத் தங்கியிருந்த தமிழ்நாட்டுத் தொழிலதிபர் ஒருவரிடம் பெருந்தொகையைக் கடனாகப் பெற்று அதனை நன்கொடையாக வழங்கினார். சென்னை திரும்பியதும் முதல்வேலையாக அத்தொகையைத் திருப்பிக் கொடுத்தார்.

★ எம்.ஜி.ஆர் தமிழக முதலமைச்சராக இருந்தபோது ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி புகழ் பெற்றார்.

★ தமிழ் வளர்ச்சிக்காக தமிழ் எழுத்து முறையை எளிமைப்படுத்தினார். மதுரையில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார். தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தார்.

**சிந்தனை வினா:**

**சிறந்த அரசியல் தலைவருக்கு இருக்கவேண்டிய பண்புகளாக நீங்கள் கருதுவன யாவை ?**

★ சிறந்த ஆளுமைப் பண்பு
★ அனைவரையும் கட்டுப்படுத்தும் திறன்
★ நேர்மை
★ எளிமை
★ பிறருக்கு உதவுதல்
★ மக்களுக்காகவாழ்தல்
★ மனித நேயம்

**கூடுதல் வினாக்கள்–விடைகள்**

**நிரப்புக.**

1. எம்.ஜி.ஆர் .............. ஆண்டு பிறந்தார். **விடை : 1917 ஆம்**
2. எம்.ஜி.ஆர். தம் செல்வத்தை வாரி வழங்கியதால் .............. என அழைக்கப்பட்டார் **விடை : பொன்மனச் செம்மல்**
3. தந்தை பெரியாரின் எழுத்துச் சீர்திருத்ததை நடைமுறைப்படுத்தியவர்............ ஆவார். **விடை : எம்.ஜி.ஆர்**
4. எம்.ஜி.ஆர். தஞ்சையில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் ..............த் தோற்றுவித்தார் **விடை : தமிழ்ப்பல்கலைக்கழகத்தை**



5. தமிழக அரசால் சென்னையிலும், மதுரையிலும் பேருந்து நிலையங்களுக்கு ..............பெயர் சூட்டப்பட்டுள்ளது. **விடை : எம்.ஜி.ஆர்**

**குறுவினா :**

**1. எம்.ஜி.ஆரின் பிறப்பு பற்றி எழுதுக.**

★ இலங்கையில் உள்ள கண்டியில் 1917 சனவரித் திங்கள் பதினேழாம் நாள் கோபாலன் – சத்தியபாமா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.

**2. எம்.ஜி.ஆரை பொன்மனச் செம்மல் என அழைக்கக் காரணம் யாது ?**

★ எம்.ஜி.ஆர். தாம் ஈட்டிய செல்வத்தை மற்றவர்களுக்குக் கொடுத்து மகிழ்ந்தவர். புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்கள் நிகழ்ந்தபோதெல்லாம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, உடை வழங்கி அவர்களின் துயர் துடைக்க இவரின் கொடைக்கரங்கள் நீண்டன.

★ இதனால் இவர் பொன்மனச் செம்மல் என்று அழைக்கப்பட்டார்.

**3. தமிழக அரசு எம்.ஜி.ஆருக்குச் செய்த சிறப்புகள் யாவை ?**

★ எம்.ஜி.ஆரின் நினைவைப் போற்றும் வகையில் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தை நிறுவியுள்ளது.

★ சென்னைக் கடற்கரையில் நினைவிடம் ஒன்றை அமைத்துள்ளது.

★ பாரத ரத்னா விருது வழங்கிப் பெருமைப்படுத்தியது.

★ எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவையொட்டி சென்னையிலும், மதுரையிலும் பேருந்து நிலையங்களுக்கு எம்.ஜி.ஆர். பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**கற்பவை கற்றபின்**

**1. தமிழக முதலமைச்சர்களின் பெயர்களைப் பட்டியலிடுக.**

1. அ. சுப்பராயலு ரெட்டியார், 2. பனகல்ராஜா, 3. பி.சுப்பராயன்,
4. பி.முனுசாமி நாயுடு, 5. பொப்பிலி ராஜா,
6. பி.டி.இராசன், 7. கே.வி. ரெட்டிநாயுடு,
8. சி.இராஜகோபாலாச்சாரியார், 9. டி.பிரகாசம்,
10. ஓ.பி.இராமசாமி ரெட்டியார், 11. பி.எஸ்.குமாரசுவாமி ராஜா,
12. கே. காமராஜா, 13. எம். பக்தவத்சலம்,
14. சி.என். அண்ணாதுரை, 15. மு. கருணாநிதி,
16. எம்.ஜி.ராமச்சந்திரன், 17. ஜானகி ராமச்சந்திரன்,
18. ஜெ. ஜெயலலிதா, 19. ஓ.பன்னீர்செல்வம்,
20. எடப்பாடி கே.பழனிசாமி

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. எம்.ஜி.ஆர் நடித்த திரைப்படங்களில் உள்ள சமூக நலன் சார்ந்த பாடல்களைத் தொகுத்து எழுதுக.**

1. கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த
தொழிலாளி விவசாயி

2. கொடுத்ததெல்லாம் கொடுத்தான்
அவன் யாருக்காகக் கொடுத்தான்
ஒருத்தருக்கா கொடுத்தான்
இல்லை ஊருக்காகக் கொடுத்தான்

3. திருடாதே பாப்பா திருடாதே
திருடாதே பாப்பா திருடாதே
வறுமை நிலைக்குப் பயந்துவிடாதே
திறமை இருக்கு மறந்துவிடாதே!

4. நான் ஆணையிட்டால்
அது நடந்துவிட்டால்
இங்கு ஏழைகள் வேதனைப்பட மாட்டார்


---

**விரிவானம்**

**இயல் ஒன்று**

## 1.4. அறிவுசால் ஒளவையார்

**மன வரைபடம்**




**மதிப்பீடு**

**1. அறிவுசால் ஒளவையார் என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.**

ஒளவையார் அதியமானின் நண்பர். ஒருமுறை நட்பு நிமித்தமாக ஒளவையார் அதியமான் ஆட்சி செய்யும் தகடூருக்கு வந்தார். அரண்மனையில் நீண்டகாலம் தங்கினார்.

ஒருமுறை அதியமான் காட்டுவளம் காணச் சென்றான் அப்போது மலையின் உச்சியிலிருந்த கருநெல்லி மரத்திலிருந்து அரிதான நெல்லிக்கனியைப் பறித்தான். அதைப் பரிசாக ஒளவைக்குக் கொடுத்தார்.



அதற்கு ஒளவையார்," நாட்டைக் காக்கும் அரசன் நீ உண்ணாமல் எனக்கு கொடுத்துவிட்டாய்" என்றார். அதற்கு அதியமான், " என்னைப்போன்ற ஓர் அரசன் இறந்து போனால் வேறு ஒருவர் அரசராகிவிடுவார். ஆனால் உங்களைப் போன்ற அறிவில் சிறந்த புலவர் ஒருவர் மறைந்தால் ஈடுசெய்யமுடியாது. உன்னைப் புகழ முடியாமல் என் தமிழே தடுமாறுகிறது" என்றார்.

ஒருநாள் தொண்டமான் போர் தொடுத்து வருவதாகத் தூது அனுப்பினான். அதைக்கண்டு அதியமான் அஞ்சி தயங்கினான். அப்போது ஒளவை, "போரைக்கண்டு அஞ்சுபவன் அல்லவே நீ" என்றாள். அதற்கு அதியமான், "போரில் இழக்கும் உயிர்களை நினைத்து அஞ்சுபவன். தந்தையை இழந்த குழந்தைகள், கணவனை இழந்த பெண்கள், மகனை இழந்த தாய்மார்கள், அண்ணனை இழந்த தம்பி தங்கைகள் எனப் போரின் வெற்றிக்குப் பின்னால் இத்தனை கண்ணீர் நிறைந்துள்ளன" என்றான்.

உடனே ஒளவை கவலைப்படாதே, தொண்டைமானிடம் சென்று நான் பேசி போர் ஏற்படாதவாறு தடுக்கிறேன் என்று கூறி தொண்டமானைச் சந்திக்கச் சென்றார்.

தொண்டைமான் ஒளவையை வரவேற்றுப் பெருமையுடன் தன் படைகளைக் காட்டினான். எல்லாக் கருவிகளும் புதிதாக இருந்தன. நெய்பூசப்பட்டு, மாலையும் மயில் தோகைகளும் அணிவிக்கப்பட்டு எழிலாகக் காட்சியளித்தன.

உங்கள் அதியமானின் படைக்கருவிகள் எவ்வாறு இருக்கும் என்று கேட்டான். "அது உடலைத் துளைத்த குருதிக்கறையுடன் நுனி ஒடிந்தும், கூர் மழுங்கியும் கொல்லனின் உலைக்களத்தில் கிடக்கின்றன" என்றதும், தொண்டைமான் சிந்தனையில் ஆழ்ந்தான்.

" என்ன யோசிக்கிறாய்?" என்றார் ஒளவை. "நான் போர்க்களத்தைக் கண்டதில்லை, அதியமான் பலபோர்களை நடத்தி வெற்றி கண்டவன். அவனோடு போரிடுவது எத்தகைய அழிவைத் தரும் என்று யோசித்தேன். நன்றி தாயே என் கண்களைத் திறந்தமைக்கு. போர் வேண்டாம் என்று அதியமானிடம் கூறிவிடுங்கள்" என்றான்.

இவ்வாறு ஒரு போர் ஒளவையார் மூலம் தடுக்கப்பட்டது.

---

**கற்பவை கற்றபின்**

**1. அறிவுசால் ஒளைவாயர் – என்னும் நாடகத்தை வகுப்பில் நடித்துக்காட்டுக.**

**காட்சி – 1**

**இடம் : அதியமான் அரண்மனை**

**நாடக மாந்தர்கள் : அதியமானாக முத்து, ஒளவையாராக சுமதி, அமைச்சராக வேலன்**

**ஒளவையார் (சுமதி ) :** நாட்டு மக்கள் நலனையே நாளெல்லாம் நினைத்து நல்லாட்சி செய்யும் அதியமான் நெடுமான் அஞ்சியே வணக்கம்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**அதியமான் (முத்து ) :** அருந்தமிழ்க் கவிதைகளால் அனைவரையும் கவர்ந்த ஔவையே வாருங்கள்! வாருங்கள்! வணக்கம்.

**ஔவையார் (சுமதி ) :** ஊர் ஊராகச் சென்று மக்களையும் மன்னர்களையும் கவிதையால் மகிழ்வித்து வந்த என்னை, உன் அன்பினால் கட்டிப்போட்டுவிட்டாய். நானும் நீண்டகாலமாக உன் அரண்மனையிலேயே தங்கிவிட்டேன்.

**அதியமான் (முத்து) :** நீங்கள் என் அரண்மனையில் தங்கியிருப்பது எனக்குக் கிடைத்த பெரும்பேறு.

**ஔவையார் (சுமதி ) :** அதெல்லாம் இருக்கட்டும். காலையிலிருந்து உன்னை அரண்மனையில் காணவில்லையே, எங்கே சென்றிருந்தாய்?

**அதியமான் (முத்து ) :** காட்டுவளத்தைக் கண்டு மகிழ்ந்து நீண்ட நாள்கள் ஆகிவிட்டன. அதனால்தான் இன்று நம் அமைச்சரோடும் வீரர்கள் சிலரோடும் காட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கே இந்தக் கனியைப் பறித்தேன். இதைச் சாப்பிட்டுப் பார்த்துச் சுவை எப்படி இருக்கிறது என்று சொல்லுங்கள் தாயே.

**ஔவையார் (சுமதி ) :** நீ தரும் கனி என்றால் அது சுவையாயகத்தான் இருக்கும். பல கடல்களுக்கு அப்பால் எங்கோ தொலைவில் இருக்கும் ஒரு நாட்டிலிருந்து இந்த தமிழ்நாட்டிற்குக் கரும்பைக் கொண்டுவந்தவர்கள் உன் முன்னோர்கள்தானே? இனிப்புக்கும் உங்கள் குலத்திற்கும் தொடர்பு உண்டு அல்லவா? அதனால் நீ கொடுக்கும் கனியும் இனிக்கத்தானே செய்யும்?

**அதியமான் (முத்து) :** அந்தக் கரும்பைவிட இனிக்கிறது தங்கள்பேச்சு. சரி, இதோ இந்தக் கனியைச் சுவைத்துப்பாருங்கள்.

(அதியமான் நெல்லிக்கனியை ஔவையாரிடம் தருகிறான். ஔவையார் அதனை வாயிலிட்டுச் சுவைக்கிறார்)

**ஔவையார் (சுமதி ) :** அடடா! என்ன சுவை! இவ்வளவு சுவையுள்ள கனியை நான் இதுவரை உண்டதே இல்லை. என்ன கனி இது?

**அதியமான் (முத்து ) :** இது நெல்லிக்கனியின் ஒரு வகை.

**அமைச்சர் (வேலன் ) :** தாயே, நமது அரசர் மிகவும் எளிதாகக் கூறிவிட்டார். இஃது எங்கும் எளிதாகக் கிடைக்கும் கனியன்று. கிடைப்பதற்கு அரிதான நெல்லிக்கனி இது. எப்போதாவது ஒருமுறைதான் காய்த்துப் பழுக்கும். இன்று நாங்கள் காட்டுப்பகுதிக்குச் சென்றிருந்தபோது ஒரு மலையுச்சியில் இருந்த கருநெல்லி மரத்தில் இக்கனி பழுத்திருந்தது. அந்த மரத்தில் நமது வீரர்களால் ஏறமுடியவில்லை. பிறகு நமது அரசரே முயன்று மரத்தில் ஏறி இந்தக் கனியைப் பறித்தார்.

**ஔவையார் (சுமதி ) :** (வியப்புடன்) என்ன, அதியமானே மலையுச்சியில் இருந்த மரத்தில் ஏறி இதனைப் பறித்தானா?

**அமைச்சர் (வேலன் ) :** அது மட்டுமன்று. இக்கனியை உண்டவர்கள் நோய்நொடியின்றி நீண்டகாலம் வாழ்வார்கள் என்று பெரியோர் கூறுவர்.

**ஔவையார் (சுமதி ) :** அதியமானே! என்ன செயல் செய்துவிட்டாய்?



நாட்டைக் காக்கும் பொறுப்பை உடைய நீ இதனை உண்ணாமல் எனக்குக் கொடுத்துவிட்டாயே. முன்பே தெரிந்திருந்தால் இதனை நான் உண்ணாமல் உன்னையே சாப்பிட வைத்திருப்பேனே.

**அதியமான் (முத்து) :** என்னைப்போன்ற ஓர் அரசன் இறந்துபோனால் வேறு ஒருவர் அரசராகிவிடுவார். ஆனால் உங்களைப் போன்ற அறிவிற் சிறந்த புலவர் ஒருவர் மறைந்தால் அந்த இழப்பை யாராலும் ஈடுசெய்ய முடியாது. அதனால்தான் நான் எதுவும் கூறாமல் நெல்லிக்கனியை உங்களை உண்ணச் செய்தேன்.

**ஔவையார் (சுமதி ) :** அதியமானே! தமிழின்மீது நீ கொண்டுள்ள பற்று என் உள்ளத்தை உருகச் செய்கிறது. உன்னைப் புகழ முடியாமல் என் தமிழே தடுமாறுகிறது.

**அதியமான் (முத்து) :** அப்படிச் சொல்லாதீர்கள். உங்கள் தமிழுக்குத் தடுமாற்றம் இல்லை. தாழ்வும் இல்லை. உங்கள் நாவில் பிறக்கும் தமிழ் என்றும் நிலைபெற்று வாழும். அதில் என் பெயரும் ஒட்டியிருக்கும். அதுதான் எனக்கு மகிழ்ச்சி.

**காட்சி – 2**

**இடம் : அதியமான் அரண்மனை**

**நாடக மாந்தர்கள் : அதியமானாக முத்து, ஔவையாராக சுமதி**

**ஔவையார் (சுமதி ) :** மக்களின் முகங்களில் கூடக் கவலையின் நிழல் படியக்கூடாது என்று கருதும் அதியமானே, இன்று உன் முகத்தில் கவலையின்இருள் கவிழ்ந்திருப்பதன் காரணம் என்னவோ?

**அதியமான் (முத்து ) :** இன்று காலை நம் ஒற்றர்கள் கொண்டுவந்த ஒரு செய்தி என் உள்ளத்தில் சிறு கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. மன்னன் தொண்டைமான் நம்மோடு பகைமை கொண்டவன் என்பது தாங்கள் அறிந்ததுதானே? அவன் இப்போது நம்மீது படையெடுத்துவர ஏற்பாடு செய்துவிட்டானாம். நம் தலைக்கு மேல் போர் மேகங்கள் சூழ்ந்துவிட்டன.

**ஔவையார் (சுமதி ) :** அதியமான் நெடுமான் அஞ்சியே, உன் பெயரில்தான் அஞ்சி என்னும் சொல் இருக்கிறதேயன்றி, நீ அஞ்சி நான் ஒருநாளும் கண்டதில்லையே. போர் உனக்குப் புதிதா என்ன?

**அதியமான் (முத்து ) :** போர் எனக்குப் புதிதும் அன்று, நான் போரைக்கண்டு அஞ்சுபவனும் அல்லேன். ஆனாலும்...

**ஔவையார் (சுமதி ) :** ஆனாலும் ஏன் இந்தக் கலக்கம்? ஈரத்திலும் வீரத்திலும் உனக்கு இணைசொல்ல யாருண்டு? நீர் நிலையில் படுத்திருக்கும் யானையானது, தன்மீது ஏறிக்குதித்தும் தந்தங்களைக் கழுவியும் விளையாடும் சிறுவர்களிடம் பணிந்து அன்பு காட்டும். அதுபோல நீயும் எம்மைப்போன்ற புலவர்களிடம் அன்பு காட்டிக் காட்சிக்கு எளியவனாக விளங்குகின்றாய். அதே யானை, போர்க்களத்தில் பகைவரின் படையை வெகுண்டோடச் செய்வதுபோல நீயும் பகைவரை எதிர்த்து வெல்கிறாய். அத்தகைய வீரமுடைய நீ இன்று போரைக்கண்டு தயங்கலாமா?

**அதியமான் (முத்து) :** தமிழ் அறிந்த அன்னையே! நான் எத்தனையோ



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



போர்க்கலங்களைக் கண்டவன், பகைவர்களை வென்றவன் என்பது தங்களுக்குத் தெரியாததன்று. ஆனால், ஒவ்வொரு போரின்போதும் எத்தனை உயிரிழப்புகள்? எவ்வளவு அழிவு? தந்தையை இழந்த பிள்ளைகள், கணவனை இழந்த பெண்கள், மகனை இழந்த தாய்மார்கள், அண்ணனை இழந்த தம்பி தங்கைகள் என எத்தனையோ போரின் கண்ணீர் ஒவ்வொரு போர் வெற்றிக்குப் பின்னாலும் மறைந்திருக்கிறது. எனவே, இந்தப் போரைத் தவிர்த்தால் என்ன?

**ஔவையார் (சுமதி ) :** அன்பிற் சிறந்த அதியமானே, இப்போதுதான் உன் உள்ளம் எனக்குப் புரிந்தது. உன் கவலையை நான் தீர்க்கிறேன். நான் இப்போதே தொண்டைமானிடம் செல்கிறேன். அவனிடம் பேசிப் போர் ஏற்படாதவாறு தடுக்கிறேன்.

**அதியமான் (முத்து) :** ஆனால்...

**ஔவையார் (சுமதி) :** நீ என்ன நினைக்கிறாய் என எனக்குப் புரிகிறது. உன் தன்மானத்துக்கும் வீரவுணர்வுக்கும் சிறிதுகூட இழுக்கு ஏற்படாமல் நான் நடந்துகொள்வேன். நான் சென்று வருகிறேன்.

(ஔவையார் செல்கிறார். அதியமான் திகைத்து நிற்கிறான்)

**காட்சி : 3**

**இடம் : தொண்டைமான் அரண்மனை**

**நாடக மாந்தர்கள் : தொண்டைமானாகக் கண்ணன், ஔவையாரக சுமதி, படைத்தலைவராக பாபு.**

**தொண்டைமான் (கண்ணன் ) :** படைத்தலைவரே, நமது படையினர் போருக்கு ஆயத்தமாக உள்ளனரா?

**படைத்தலைவர் (பாபு ) :** படைவீரர்களும் ஆயத்தமாக உள்ளனர். போர்க்கருவிகளும் தேவைக்கு அதிகமாகவே உள்ளன அரசே.

**தொண்டைமான் (கண்ணன் ) :** மகிழ்ச்சி. நம் படையின் பெருக்கத்தைக் கண்டு அந்த அதியமான் அதிர்ந்து போகவேண்டும்.

**படைத்தலைவர் (பாபு) :** அதியமான் இப்போதே அதிர்ந்துதான் போயிருக்கிறார் அரசே. அதனால்தான் அவர் சமாதானம் வேண்டிப் புலவர் ஒருவரைத் தூது அனுப்பியுள்ளார்.

**தொண்டைமான் (கண்ணன் ) :** என்ன, அதியமான் தூது அனுப்பியுள்ளானா?

**படைத்தலைவர் (பாபு) :** ஆம் அரசே. சற்றுமுன்தான் நமது ஒற்றரிடமிருந்து செய்தி வந்தது. அதியமானின் தூதுவராக ஔவையார் நமது அரண்மனைக்கு வந்துகொண்டிருக்கிறாராம்.

**தொண்டைமான் (கண்ணன் ) :** வரட்டும் வரட்டும். அஞ்சியிடமிருந்து தூது வரும் ஔவை நம் போர்க்கருவிகளின் பெருக்கினைக் கண்டு அஞ்சி ஓடப்போகிறார் பாருங்கள்.

**படைத்தலைவர் (பாபு) :** அதோ ஔவையாரே வந்துவிட்டார்.

(ஔவையார் வருகிறார்)

**தொண்டைமான் (கண்ணன் ) :** போரை நிறுத்த வந்திருக்கும் ஔவையே வருக! வருக!



**ஔவையார் (சுமதி) :** தொண்டைமான் தரும் வரவேற்பைப் பார்த்தால் என் வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகத் தோன்றுகிறதே!

**தொண்டைமான் (கண்ணன் ) :** என் பகைவரின் நாட்டிலிருந்து வந்தாலும் தாங்கள் தமிழ்ப்புலவர் அல்லவா? தங்கள் வருகை எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது.

**ஔவையார் (சுமதி) :** நீயும் தமிழின் மீது அன்புடையவன் என்பதை அறியும்போது நானும் மகிழ்ச்சியடைகிறேன்.

**தொண்டைமான் (கண்ணன் ) :** அந்த மகிழ்ச்சியோடு எனது படைக்கலக் கொட்டிலைப் பார்த்துவரலாம் வாருங்களேன்.

**ஔவையார் (சுமதி) :** போர்க்கருவிகளைப் பார்த்து நான் என்ன செய்யப்போகிறேன்?

**தொண்டைமான் (கண்ணன் ) :** எத்துணைப் பெரிய படைவலிமை உடைய அரசரோடு உங்கள் அதியமான் மோதப்போகிறான் என்பதை நீங்கள் அறியவேண்டாமா?

**ஔவையார் (சுமதி ) :** அதையும்தான்பார்ப்போம் வா.

**காட்சி : 4**

**இடம் : தொண்டைமானின் படைக்கலக் கொட்டில்**

**நாடக மாந்தர்கள் : தொண்டைமனாக கண்ணன், ஔவையாராக சுமதி.**

**தொண்டைமான் (கண்ணன் ) :** என் படைக்கருவிகளைப் பாருங்கள் ஔவையாரே! இவ்வளவு பெரிய படைக்கலக் கொட்டிலை இதற்கு முன் நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள்.

**ஔவையார்(சுமதி) :** ஆமாம். வில், அம்பு, வேல், ஈட்டி, வாள், கேடயம், மழு என எத்தனை கருவிகள்! ஒவ்வொன்றிலும் எத்தனை வகைகள்! ஒவ்வொரு வகையிலும் எத்தனை எண்ணிக்கை!

**தொண்டைமான் (கண்ணன் ) :** பார்க்கும்போதே வியப்பாக இருக்கிறது அல்லவா?

**ஔவையார் (சுமதி) :** ஆமாம். கருவிகளின் அழகு மட்டுமன்றி. அவற்றை அழகாக அடுக்கி வைத்திருக்கும் முறையும் கண்களைக் கவர்கிறது. எல்லாக்கருவிகளும் புத்தம் புதியனவாக,நெய் பூசப்பெற்று, மாலையும் மயில் தோகைகளும் அணிவிக்கப்பட்டு எழிலாகக் காட்சியளிக்கின்றன.

**தொண்டைமான் (கண்ணன் ) :** உங்கள் அதியமானின் படைக்கருவிகளைப் பற்றிச் சொல்லுங்களேன்.

**ஔவையார் (சுமதி) :** அதை ஏன் கேட்கிறாய்? அவை இவ்வளவு அழகாக இல்லை. அதியமான் அடிக்கடி போர்புரிந்துகொண்டே இருப்பதால், அவனது படைக்கருவிகள் எல்லாம் பகைவர் உடலைத் துளைத்த குருதிக்கறைகளுடன் நுனி ஒடிந்தும் கூர் மழுங்கியும் கொல்லனின் உலைக்களத்தில் கிடக்கின்றன.

(தொண்டைமானின் முகம் சுருங்குகிறது)

**ஔவையார் (சுமதி ) :** தொண்டைமானே ஏன் உன் முகம்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



மாறிவிட்டது ?

**தொண்டைமான் (கண்ணன் ) :** உங்கள் சொற்கள் என்னைக் குழப்பிவிட்டன.

**ஔவையார் (சுமதி) :** என்ன குழப்பம் ?

**தொண்டைமான் (கண்ணன் ) :** என் படைக்கருவிகளின் அளவையும் அழகையும் பாராட்டிக் கூறினீர்கள். அதைக் கேட்ட என் உள்ளம் மகிழ்ச்சி அடைந்தது.

**ஔவையார் (சுமதி) :** உண்மைதான். உனது படைக்கருவிகள் புது மெருகு குறையாமல் அப்படியே இருக்கின்றன.

**தொண்டைமான் (கண்ணன் ) :** அடுத்ததாக நீங்கள் கூறிய செய்திதான் என்னைச் சிந்திக்க வைத்துவிட்டது. அதியமானின் படைக்கருவிகள் போரில் பயன்படுத்தப்பட்டு வளைந்தும் நெளிந்தும் கிடக்கின்றன என்று கூறினீர்களே, அதுதான் எனக்கு உண்மையைப் புரிய வைத்தது.

**ஔவையார் (சுமதி) :** என்ன உண்மை புரிந்துகொண்டாய் ?

**தொண்டைமான் (கண்ணன் ) :** என்னிடம் கருவிகள்தாம் மிகுதியாக உள்ளன. நான் இதுவரை போர்க்களத்தைக் கண்டதில்லை. ஆனால் அதியமான் பல போர்களை நடத்தி வெற்றி கண்டவன். அவனோடு போர் புரிவது எத்தகைய அழிவைத் தரும் என்பதைப் புரிந்துகொண்டேன்.

**ஔவையார் (சுமதி) :** அருமை! அருமை! நான் கூறியதன் உட்பொருளைத் தெளிவாகப் புரிந்துகொண்டாய்.

**தொண்டைமான் (கண்ணன் ) :** என் கண்களைத் திறந்த தாயே, போர் வேண்டாம் என்று அதியமானிடம் கூறிவிடுங்கள்.

**ஔவையார் (சுமதி ) :** மிகவும் மகிழ்ச்சி தொண்டைமானே. அவ்வாறே கூறிவிடுகிறேன். போரில்லா மகிழ்ச்சியில் இந்த உலகம் திளைக்கட்டும். நான் சென்றுவருகிறேன்.

(ஔவையார் விடைபெற்றுச் செல்கிறார்)

(திரை)

**2. சங்ககாலப் பெண் புலவர்களின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.**

| | |
|---|---|
| 1. ஔவையார் | 2. அஞ்சில் அஞ்சியார் |
| 3. காவற்பெண்டு | 4. வெண்பூதியார் |
| 5. மாசாத்தியார் | 6. நப்பசலையார் |
| 7. காக்கைப்பாடினியார் | 8. பொன்முடியார் |
| 9. வெள்ளிவீதியார் | 10. நன்முல்லையார் |
| 11. பொன்மணியார் | 12. ஆதிமந்தியார் |
| 13. வெண்ணிக்குயத்தியார் | |

**கற்கண்டு**



**இயல் ஒன்று**

## 1.5 வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும்

**மனவரைபடம்**

வல்லினம் மிகும்
- உவமைத் தொகை– மலர்ப்பாதம்
- உருவகம் – தமிழ்த்தாய்

வல்லினம் மிகாது
- வினைத் தொகை– எழுதுபொருள்
- உம்மைத்தொகை – தாய்தந்தை

**மதிப்பீடு**

**பின்வரும் தொடர்களை வல்லினம் மிகும், மிகா இடங்கள் என வகைப்படுத்துக**

1. சுட்டுத் திரிபு – **வல்லினம் மிகும்**
2. திசைப்பெயர்கள் – **வல்லினம் மிகும்**
3. பெயரெச்சம் – **வல்லினம் மிகாது**
4. உவமைத் தொகை – **வல்லினம் மிகும்**
5. நான்காம் வேற்றுமை விரி – **வல்லினம் மிகும்**
6. இரண்டாம் வேற்றுமை தொகை – **வல்லினம் மிகாது**
7. வினைத் தொகை – **வல்லினம் மிகாது**
8. உருவகம் – **வல்லினம் மிகும்**
9. எழுவாய்த் தொடர் – **வல்லினம் மிகாது**
10. எதிர்மறைப் பெயரெச்சம் – **வல்லினம் மிகாது**

**சிறுவினா.**

**1. சந்திப்பிழை என்றால் என்ன ?**

★ வல்லினம் மிகும் இடத்தில் மிகாமல் எழுதுவதும் மிகக்கூடாத இடத்தில் வல்லின மெய்இட்டு எழுதுவதும் தவறாகும். இதனைச் சந்திப்பிழை அல்லது ஒற்றுப்பிழை எனக்குறிப்பிடுவர்.

**2. வேற்றுமைகளில் வல்லினம் மிகும் இடங்களை எழுதுக.**

★ இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும். (எ.கா) பாடத்<u>**தைப்**</u> படி

★ நான்காம் வேற்றுமை உருபாகிய கு வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும்.

(எ.கா) அவனு<u>**க்குப்**</u> பிடிக்கும்

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**3. வல்லினம் மிகாத் தொடர்கள் ஐந்தினைஎழுதுக.**

1. எழுவாய்ச் சொற்களை அடுத்து வல்லினம் மிகாது.
   (எ.கா) தம்பி படித்தான்
2. அது, இது, எது ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகாது.
   (எ.கா) அது சென்றது
3. எதிர்மறைப்பெயரெச்சம் ஆகியவற்றை அடுத்து வல்லினம் மிகாது.
   (எ.கா) எழுதிய பாடல்
4. வினைத் தொகையில் வல்லினம் மிகாது.
   (எ.கா) எழுது பொருள்
5. உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது.
   (எ.கா) தாய் தந்தை

---

**கூடுதல் வினாக்கள்– விடைகள்**

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. உருவகத்தில் ............ மிகும் **விடை : வல்லினம்**
2. கிழக்குக் கடல் என்பது............ ஆகும் **விடை : திசைப்பெயர்**
3. எழுதாத பாடல் என்பது ............ ஆகும் **விடை : எதிர்மறைப் பெயரெச்சம்**
4. வினைத் தொகையில் வல்லினம் ............ **விடை : மிகாது**
5. தாய் தந்தை என்பது ............ தொடர் ஆகும். **விடை : உம்மைத் தொகை**

---

குறுவினா.

**1. எண்ணுப்பெயர், திசைப் பெயர் வல்லினம் மிகுமா ? சான்று தருக.**

★ எண்ணுப்பெயர்களில் எட்டு, பத்து ஆகியஇரண்டு பெயர்களில் மட்டும் வல்லினம் மிகும்.
(எ.கா) பத்துக்காசு, எட்டுப்புத்தகம்

★ திசைப்பெயர்களை அடுத்து வல்லினம் மிகும்.
(எ.கா) கிழக்குக் கடல், வடக்குத் தெரு

---

**2. குற்றியலுகரத் தொடர்களில் வல்லினம் மிகாது. ஏன் ?**

★ உகரத்தில் முடியும் வினையெச்சங்கள் மென்தொடர்க் குற்றியலுகரமாகவோ, இடைத்தொடர்க் குற்றியலுகரமாகவோ இருந்தால் வல்லினம் மிகாது.
(எ.கா) தின்று தீர்த்தான், செய்து பார்த்தான்

---



**கற்பவை கற்றபின்**

**1. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள வல்லினம் மிகும், மிகா இடங்களைக் கோடிட்டு அறிக. அவற்றின் காரணங்களை எழுதுக.**

**வல்லினம் மிகும் இடங்கள் :**

அந்த இந்த என்னும் சுட்டுத்திரிபுகளை அடுத்து வல்லினம் மிகும்.
(எ.கா) **அந்தப்** பக்கம், **இந்தக்** கவிதை

எந்த என்னும் வினாத் திரிபை அடுத்து வல்லினம் மிகும்.
(எ.கா) **எந்தத்** திசை ? **எந்தச்** சட்டை ?

எண்ணுப்பெயர்களில் எட்டு, பத்து ஆகிய இரண்டு பெயர்களில் மட்டும் வல்லினம் மிகும்.
(எ.கா) **எட்டுப்**புத்தகம், **பத்துக்**காசு

**வல்லினம் மிகா இடங்கள் :**

அது, இது, எது ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகாது.
(எ.கா) **அது** சென்றது, **இது** பெரியது, **எது** கிடைத்தது ?

பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம் ஆகியவற்றை அடுத்து வல்லினம் மிகாது.
(எ.கா) **எழுதிய** பாடல், **எழுதாத** பாடல்

---

## இயல் ஒன்று — 1.6 மொழியை ஆள்வோம்

**கேட்க :**

**நாட்டுப்பற்றை வளர்க்கும் நாடகங்களின் ஒலிப்பதிவுகளைக் கேட்டு மகிழ்க.**

**ஒற்றுமையே பலன்– நாடகம்**

**காட்சி –1**

**பங்கு பெறுவோர் : எழிலன், மணி, ஆசிரியர்**

**மாணவர்கள் :** வணக்கம் ஐயா !

**ஆசிரியர் :** வணக்கம் குழந்தைகளே ! ஏன் சோகமாக இருக்கின்றீர்கள் ?

**மணி :** ஐயா, இன்று காலை செய்தித்தாள் படித்தீர்களா ?

**ஆசிரியர் :** ஆம் மணி, இன்று அதிகாலை ஜம்முவில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

**எழிலன் :** ஏன் ஐயா ? இவ்வாறு செய்தார்கள்.

**மணி :** மனித நேயம் இல்லையா ?

**ஆசிரியர் :** இது தற்கொலைத் தாக்குதல். 40 பாதுகாப்புப் படையினரும், தற்கொலைத் தீவிரவாதி ஒருவரும் உயிரிழந்தனர். வருத்தமான விசயம். இத்தகைய தாக்குதல் நடக்காதவாறு இளைய தலைமுறையினர் காக்கவேண்டும்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**எழிலன் :** நிச்சயமாக ஐயா. எனக்கு இராணுவத்தில் சேரவேண்டும், இந்த நாட்டைக் காக்கவேண்டும் என்பதே குறிக்கோள்.
**மணி :** எனது இலட்சியமும் அதுவே ஐயா.
**ஆசிரியர் :** மிகவும் நன்று. அப்படியே செய்யுங்கள்.

---

**கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

**1. நான்விரும்பும் தலைவர்.**

**எம். ஜி. ராமச்சந்திரன்**

★ புரட்சித் தலைவர் என்று தமிழக மக்களால் போற்றப்பட்ட எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் சிறந்த நடிகராகவும், தலைசிறந்த மக்கள் தலைவராகவும் வாழ்ந்து காட்டியவர்.

★ இவர் இலங்கையிலுள்ள கண்டியில் 1917 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 17 ஆம் நாள் பிறந்தவர்.

★ எம்.ஜி.ஆர் வறுமையின் கொடுமையை நன்கு உணர்ந்தவர். வறுமை காரணமாகவே அவரும் அவருடைய அண்ணனும் பள்ளிப் படிப்பைத் தொடரமுடியாமல் நாடகக்குழுவில் சேர்ந்தனர். நாடகங்களில் சிறு சிறு வேடங்களில் நடிக்கத் தொடங்கினர். எம்.ஜி.ஆர். தமது நடிப்பாற்றலால் நாடக்குழுவின் முதன்மை நடிகராக உயர்ந்தார்.

★ அதன்பின்னர் எம்.ஜி.ஆர். திரைப்படத் துறையில் நுழைந்தார். நாடகத்துறையைப் போலவே, திரைத்துறையிலும் முதலில் சிறு சிறு வேடங்களில் நடிக்கத் தொடங்கி விரைவிலேயே கதாநாயகனாக உயர்ந்தார். எம்.ஜி.ஆர். தாம் ஏற்று நடித்த கதை மாந்தர்கள் மூலம் ஏழை, எளியோர், உழவர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் முன்னேற்றத்துக்கு உரிய கருத்துக்களை எடுத்துரைத்தார். எனவே, மக்கள் அவரைப் புரட்சி நடிகர், மக்கள் திலகம் என்றெல்லாம் போற்றினர். மேலும் இந்திய அரசு மிகச் சிறந்த நடிகருக்கு வழங்கும் பாரத் பட்டத்தை அவருக்கு வழங்கிச் சிறப்பித்தது. திரைத்துறையில் நடிகர், தயாரிப்பாளர், இயக்குநர் எனப் பன்முகத் திறமை கொண்டு விளங்கினார்.

★ எம்.ஜி.ஆர். திரைப்படங்களில் தாம் பாடி நடித்த பாடல்கள் மூலம் உயர்ந்த கருத்துக்களை மக்களிடம் விதைத்தார்.

"மாபெரும் சபைதனில் நீ நடந்தால்
உனக்கு மாலைகள் விழவேண்டும் – ஒரு
மாற்றுக் குறையாத மன்னவன் இவன் என்று
போற்றிப் புகழவேண்டும்"

போன்ற பாடல்கள் மூலம் மனிதன் எத்தகைய நோக்கத்துடன் வாழவேண்டும் என்பதை எடுத்துரைத்தார்.



★ வாழ்வில் உயர்நிலையை அடைந்தபின்னரும் எளிமையாக வாழவேண்டும் என்பதை,

"பதவிவரும்போது பணிவு வரவேண்டும்!
துணிவு வரவேண்டும் தோழா!"

என்னும் பாடல் வரிகள் மூலம் எடுத்துரைத்தார். மேலும் அப்பாடல் வரிகளுக்குத் தாமே இலக்கணமாகவும் திகழ்ந்தார்.

---

**2. நான் முதலமைச்சர் ஆனால்....**

★ நான் முதலமைச்சரானால் என்ன பணிகளைச் செய்வேன் என்பதையும் என்னென்ன திட்டங்களை நிறைவேற்றுவேன் என்பதையும் கூறவிரும்புகிறேன்.

★ மாணவர்களுக்குப் பயன்தரும் திட்டங்களைக் கொண்டு வருவேன். மாணவர்கள் சிரமமின்றி பள்ளிக்குச் சென்றுவர சிறப்புப் பேருந்துகளை இயக்க உத்தரவிடுவேன். ஏழை மாணவர்களும் உயர்கல்வி பெற உதவித் தொகை வழங்குவேன். பெண் கல்விக்கு ஊக்கமளிப்பேன்.

★ ஏரி, ஆறு, வாய்க்கால் போன்ற நீர்ப்பிடிப்புப் பகுதிகளை அழகுபடுத்துவேன். உழவர்கள் தங்கள் விளைபொருளுக்கு நல்ல விலைபெற வழிவகுப்பேன். வேளாண் ஆய்வுக்கூடங்கள் அமைப்பேன்.

★ மின் உற்பத்தியைப் பெருக்குவேன். மின் பற்றாக்குறையைப் போக்க புதியமின் உற்பத்தி நிலையங்கள் துவங்க உத்தரவிடுவேன். தொழிற்சாலைகளை ஏற்படுத்தி அனைவருக்கும் வேலை வாய்ப்பளிக்க விரைந்து செயல்படுவேன்.

★ உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றை அனைத்து மக்களும் பெற்று இன்புற்று வாழ வழிவகை காண்பேன். கல்வி வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துவேன். அனைவரும் எனக்கு ஆதரவு தர அன்புடன் வேண்டுகிறேன்.

---

**சொல்லக்கேட்டு எழுதுக.**

அனைவருக்கும் தலைவராகும் விருப்பம் இருக்கலாம். ஆனால் சிறந்த ஆளுமைப் பண்பும் அனைவரையும் கட்டுப்படுத்தும் திறனும் இருப்பவர்களால்தான் தலைவர்கள் ஆகமுடிகிறது. எடுத்துக் காட்டாகப் பின்வரும் நிகழ்வைக் காணலாம். ஒரு விளையாட்டு அணியின் தலைவருக்கான தேர்வு நடந்தது. அணியின் பயிற்சியாளர் வீரர்களிடம் தங்களை அறிமுகப்படுத்திக்கொள்ளக் கேட்டுக் கொண்டார். சிலர் தங்களை தமிழ்நாடு, கேரளம், பஞ்சாப் என அறிமுகப்படுத்திக்கொள்ள, ஒருவர் மட்டும், தன்னை "இந்தியர்" என்று அறிமுகப்படுத்திக்கொண்டார். அவர்தான் அணியின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

காரணம் மற்றவர்களிடமிருந்து தன்னைவேறுபடுத்திக் காட்டியதும், "இந்தியர்" என்று குழுவாகச் சிந்தித்ததுமே ஆகும். இப்படிப்பட்ட தகுதிகள் இருந்தால் நீங்களும் தலைவர் ஆகலாம்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**அறிந்து பயன்படுத்துவோம்.**

**எதிர்மறைச் சொற்கள் :**

வந்தது நீ அல்ல; பார்த்தது நான் அல்ல; நான் படித்த புத்தகம் இது அல்ல என்றெல்லாம் பேசுகின்றோம். இவையெல்லாம் சரியான தொடர்கள் அல்ல. எதிர்மறை வினைமுற்றுகள் பலஉண்டு. அவற்றை இடம் அறிந்து பயன்படுத்தவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| தன்மை | ஒருமை | – | நான் அல்லேன். |
| | பன்மை | – | நாம் அல்லோம். |
| முன்னிலை | ஒருமை | – | நீ அல்லை. |
| | பன்மை | – | நீவிர் அல்லீர். |
| படர்க்கை | ஆண்பால் | – | அவன் அல்லன். |
| | பெண்பால் | – | அவள் அல்லள். |
| | பலர்பால் | – | அவர் அல்லர். |
| | ஒன்றன் பால் | – | அஃது அன்று. |
| | பலவின்பால் | – | அவை அல்ல. |

"வேறு, உண்டு, இல்லை" – ஆகியவை மூவிடத்திற்கும், ஐம்பாலுக்கும் பொதுவான சொற்கள் ஆகும்.

**பின்வரும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.**

1. அதைச் செய்தது நான் அன்று. **விடை : அல்லேன்**
2. பானையை உடைத்தது கண்ணன் அல்ல. **விடை : அல்லன்**
3. மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அல்லை. **விடை : அன்று**
4. சித்தர்கள் செயற்கையை விரும்பியவர்கள் அல்லோம் . **விடை : அல்லர்**
5. பகைவர் நீவீர் அல்லர் **விடை : அல்லீர்**

**சரியான எதிர்மறைச் சொற்களைக்கொண்டு நிரப்புக.**

1. தாங்கள் படிக்கவேண்டிய புத்தகங்கள் இவை.......... . **விடை : அல்ல**
2. உங்களோடு வருவோர்.......... அல்லோம். **விடை : விரும்பியவர்கள்**
3. மணிமேகலை செல்வ வாழ்வை விரும்பியவள் .......... . **விடை : அல்லள்**
4. ஈ மொய்த்த பண்டங்கள் உடலுக்கு நன்மை செய்வன.......... . **விடை : அல்ல**
5. இந்த நிலத்துக்கு உரிமையாளர் .......... அல்லை. **விடை : நீ**



**கட்டுரை எழுதுக.**

**நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு.**

**குறிப்புச் சட்டம் :**

**முன்னுரை, நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு, இளைஞர்கள் முன்னேற்றம், இளைஞர்கள் மேம்பாட்டிற்கான சிறப்பம்சங்கள், பிரதம மந்திரி திறன் மேம்பாட்டுத் திட்டம், முடிவுரை.**

**முன்னுரை :** பொதுவாக ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் வளர்ச்சிக் கூறுகளின் நிலைத்த தன்மைக்கும் உந்து சக்திகளாக பல்வேறு காரணிகள் அறியப்பட்டாலும், அவற்றுள் முதன்மையானது மட்டுமல்ல, தவிர்க்க முடியாத சக்தியாகவும் முன்நிற்பது அந்நாட்டின் இளைஞரே ஆவர்.

**நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு :** இளைஞர்களின் பங்களிப்பும் மாறுபட்ட அணுகுமுறையும் நாட்டின் வளர்ச்சிப் போக்கினை தீர்மானிப்பதற்குப் பேருதவியாக இருந்தால் இளைஞர்களின் முன்னேற்றத்திற்கேற்ப நாட்டின் வளர்ச்சி விரைவு படுத்தப்பட்டது. அந்த வகையில் இளைஞர்கள் நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் வளர்ச்சித் தூதுவர்களாகக் கருதப்பட்டனர். எதிர்காலம் மட்டுமின்றி நிகழ்காலத் தேவைகளையும் கருத்தில் கொண்டு வளர்ச்சி சமத்துவத்தைப் பரவலாக்குவதற்கான செயல்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் வளர்ச்சிப் பங்காளிகளாகவும் செயல்பட்டு வருகின்றனர்.

**இளைஞர்கள் முன்னேற்றம் :** இளைஞர்கள் முன்னேற்றத்தில் அக முன்னேற்றமானது இளைஞர்களின் தனித் திறமை சார்ந்தது. ஒரு செயலை மேற்கொள்வதற்கென தனி நபர் திறன்களை வளர்த்தல் மற்றும் முறையாகச் செயல்படுத்துதல்.

புறமுன்னேற்றமானது பொது நிலையில் சமூக மேம்பாடு கருதி ஆக்கபூர்வமான செயல்பாடுகளில் ஈடுபடுதல் சார்ந்தது. குடும்பம், சமூகம், நாடு, மக்கள் வளர்ச்சி, மாற்றம் போன்றவற்றில் முழு ஈடுபாடுடன் பங்கேற்றல்.

**இளைஞர்கள் மேம்பாட்டிற்கான சிறப்பம்சங்கள் :** இவ்வாறு எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வரும் சூழ்நிலையில் 2017– 2018ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் இளைஞர்கள் மேம்பாட்டிற்காக பல்வேறு சிறப்பம்சங்கள் அறிவிக்கப்பட்டன. அவற்றுள் சில,

★ 3 கோடி இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்.
★ வெளிநாட்டு மொழிக் கல்வி கற்றுத்தர நடவடிக்கைகள்.
★ இளைஞர்களின் வருடாந்திரக் கற்றலை அளவிடப் புதிய முறை.
★ மாணவர்கள் புதுமை படைக்கும் வகையில் பாடத்திட்டம் மாற்றி அமைத்தல்.
★ தேவைப்படும் துறைகளில் போதுமான வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.
★ இளைஞர் நலன் வேலைவாய்ப்பிற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்தல்.

**பிரதம மந்திரி திறன் மேம்பாட்டுத் திட்டம் :** மத்திய அரசின் திறன்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள தேசிய திறன் மேம்பாட்டு கழகத்தின் மூலம் இளைஞர்களுக்குத் திறன்மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கும் முன்னோடித் திட்டம் இதுவாகும். தேசிய திறன் தகுதி கட்டமைப்பு மற்றும் தொழில் துறையினர் நிர்ணயித்துள்ள தரத்திற்கேற்ப திறன் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி பெறுவோரின் திறன்கள் மூன்றாம் தரப்பினர் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு தகுந்த பரிசுகள் வழங்கப்படும்.

**முடிவுரை :** நாட்டின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு இளைஞர்கள் தங்களின் தனித் திறன்களை இழந்துவிடாமலும் அல்லது தவறான வழிகளில் பயன்படுத்தி விடாமலும் இருக்கும் வகையில் திறன் மேம்பாடு மற்றும் முறையான கண்காணிப்பு தொடரும் பட்சத்தில் அவர்கள் வளர்ச்சிக்கான மாற்றும் சக்திகளாக அடையாளம் காணப்பட்டு திறன்மிகு இந்தியா மட்டுமல்ல வல்லரசு இந்தியாவை, வளர்ந்த இந்தியாவை உருவாக்க முடியும். அதற்கு அரசுகள், மக்கள், சமூக அமைப்புகள் மற்றும் இளைஞர் மேம்பாட்டு இயக்கங்கள் ஆகியவை ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியமாகும்.

## இயல் ஒன்று — 1.7 மொழியோடு விளையாடு

**வட்டத்தில் உள்ள எழுத்துக்களைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக**




கருமை, வேழம்,
வேற்றுமை, நாளை,
பழமை, நாடு,
கடமை, பல், ஒற்றுமை,
துளை, ஒருமை, பட்டம்
கடுமை, களை



**கதை நிகழ்வுக்கேற்பச் சொற்றொடரை முறையாக வரிசைப்படுத்துக.**

1. தொண்டைமானிடம் ஔவை தூது போதல்
2. தொண்டைமான் படையெடுத்து வரும் செய்தியை அதியமான் ஔவைக்குத் தெரிவித்தல்.
3. ஔவைக்குத் தொண்டைமான் தன் படைக்கருவிகளைக் காட்டுதல்.
4. அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி வழங்குதல்.
5. தொண்டைமான் போர் வேண்டாம் என்று முடிவு செய்தல்.
6. தொண்டைமானிடம் ஔவை, அதியமானின்படைச் சிறப்பைக் குறிப்பால் உணர்த்துதல்.

**விடைகள் :**

1. அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி வழங்குதல்.
2. தொண்டைமான் படையெடுத்து வரும் செய்தியை அதியமான் ஔவைக்குத் தெரிவித்தல்.
3. தொண்டைமானிடம் ஔவை தூது போதல்
4. ஔவைக்குத் தொண்டைமான் தன் படைக்கருவிகளைக் காட்டுதல்.
5. தொண்டைமானிடம் ஔவை, அதியமானின்படைச் சிறப்பைக் குறிப்பால் உணர்த்துதல்.
6. தொண்டைமான் போர் வேண்டாம் என்று முடிவு செய்தல்.

### நிற்க அதற்குத் தக...

**என் பொறுப்புகள்**

★ தலைமைக்குரிய பண்புகளை அறிந்து வளர்த்துக்கொள்வேன்

★ சமூக மாற்றத்திற்குக் காரணமான தலைவர்களின் வரலாறுகளை அறிந்து போற்றுவேன்.

**★கலைச்சொல் அறிவோம்**

| | |
|---|---|
| குதிரையேற்றம்–*Equestrian* | ஆதரவு–*Support* |
| கதாநாயகன் –*The Hero* | வரி–*Tax* |
| முதலமைச்சர் –*Chief Minister* | வெற்றி–*Victory* |
| தலைமைப்பண்பு –*Leadership* | சட்டமன்ற உறுப்பினர்–*Member of Legislative Assembly* |

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**இந்தியப் பிரதமர்களின் பெயர்ப்பட்டியலை இணையத்தில் தேடி எடுத்து எழுதுக,**

1. ஜவஹர்லால் நேரு,
2. குல்சாரிலால் நந்தா,
3. லால்பகதூர் சாஸ்திரி,
4. இந்திரா காந்தி,
5. மொரார்ஜி தேசாய்,
6. சரண்சிங்,
7. இராஜீவ் காந்தி,
8. வி.பி. சிங்,
9. சந்திரசேகர்,
10. பி.வி.நரசிம்மராவ்,
11. வாஜ்பாய்,
12. தேவகவுடா,
13. ஐ.கே.குஜ்ரால்,
14. மன்மோகன் சிங்,
15. நரேந்திர மோடி.

Padasalai

செலக்சன்

எங்கள் வெளியீடுகள் :

3,4,5,6,7,8 - வகுப்புகளுக்கு
5 in 1 ( TM & EM )

6,7,8,9,10 - வகுப்புகளுக்கு
தமிழ், ஆங்கிலம்
முப்பருவம்

6,7,8,9,10 - வகுப்புகளுக்கு
கணக்கு, அறிவியல், சமூக அறிவியல்
முப்பருவம் - ( TM & EM )

(6,7,8) (9,10) - வகுப்புகளுக்கு
தமிழ் கட்டுரைக் கனிகள்

10 & 12 - வகுப்புகளுக்கு
வினா வங்கி ( TM & EM )

அன்பு நிலையம்
மதுரை – 625001

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com